
பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

When, only The best is Good Enough




Buy Solide Pumps

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ 2/-

தரமானதே சிறந்தது என்றால்



சொலிட் பம்பையே வாங்குங்கள்

சுடர்: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு புரட்டாதி மீ 17 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 21 (03 - 10 - 1988) UTHAYAN - A lively Tamil Daily கதிர்: 199

சிறைப் பிடித்த

# இரு ஜவான்களையும் புலிகள் விடுவித்தனர்

## நல்லெண்ணத்தை இந்தியாவுக்கு தெரிவிக்கவே செய்ததாக அறிவிப்பு ஆயுதமும் திருப்பிக் கொடுக்கப்பட்டது

— உதயன் புதுக்குடியிருப்புச் செய்தியாளர் —

புதுக்குடியிருப்பு, அக்டோபர் 3

தமிழீழ விடுதலைப் புலிகள், முல்லைத்தீவில் வைத்துச் சிறைப்பிடித்த இரண்டு இந்திய அமைதிப்படை ஜவான்களையும் கடந்த சனிக்கிழமை பொதுமக்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் விடுவித்தனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி (திங்கட்கிழமை) குமுழமுனையில் வைத்து அமைதிப்படையைச் சேர்ந்த சார்ஜென்ட் ராஜேந்தர் (மதுரையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்), நாயுக் நாயுடு ஆகிய இருவரும் ஆயுதங்களுடன் விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டனர்.

அவர்கள் இருவரும் இம்மாதம் முதலாம் திகதி அம்பலவன் பொக்கணை வித்தியாலயத்தில் வைத்து பொதுமக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் வைத்திருந்த எஸ். எம் ஜி துப்பாக்கியும் அதற்குரிய ரவைகளும் திருப்பிக் கொடுக்கப்பட்டன.

இந்திய அரசாங்கத்துக்கும், மக்களுக்கும் எங்கள் நல்லெண்ணத்தைத் தெரிவிப்பதற்காகவே சிறைப்பிடித்த வர்களை விடுவிக்கிறோம் என்று தமிழீழ விடுதலைப் புலிகள் பிரமுகரான முல்லைத்தீவு மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. வசந்தன், விடுவிப்பு வைபவத்தில் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்ட இரண்டு இராணுவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

## முதல் தடவையாக கைதிகளுடன் ஆயுதத்தையும் ஒப்படைத்துள்ளோம்

### எமது இலட்சியம், நல்லெண்ணத்தை இந்திய அரசும், சர்வதேசமும் நன்கு அறிந்து கொள்ளட்டும்

புதுக்குடியிருப்பு அக் 3

எமது போராட்ட வரலாற்றிலேயே முதன் முதலாக எம்மால் சிறைபிடிக்கப்பட்ட கைதிகளுடன் ஆயுதத்தையும், ரவைகளையும் கொடுத்து விடுவிக்கின்றோம்.

எமது இலட்சியத்தையும் நல்லெண்ணத்தையும் இந்திய அரசும், சர்வதேசமும் இச்செயல் மூலம் நன்கு அறிந்து கொள்ளட்டும்.

சிறை பிடிக்கப்பட்ட இரு இந்திய ஜவான்களை விடுவித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளர் திரு வசந்தன் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

திரு வசந்தன் மேலும் தமதுரையில் தெரிவித்ததாவது.

நாம் இரு இந்திய இராணுவ ஜவான்களை கைது செய்ததில் இருந்து தற்போதைய நேரம் வரை மிகவும் நல்ல முறையில் அவர்களைக் கவனித்துள்ளோம்.

இதனை நீங்கள் அனைவரும் அவர்களிடம் கேட்டறிந்தீர்கள்.

எம்மிடமுள்ள மிகக் குறைந்த வசதி நிலையிலும், எம்மை ஒறுத்து, இவர்களுக்குச் சிறு

(8 ஆம் பக்கம் பார்க்க)

### கான்ஸ்டபிள்கள்: ரிவால்வர்கள் வழங்க முடிவு

கொழும்பு, அக்.3

பொலீஸ் சேவையில் உள்ள கான்ஸ்டபிள்கள் மற்றும் சார்ஜண்டுகளுக்கு விரைவில் ரிவால்வர்கள் வழங்கப்படவுள்ளன.

பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

ஆரம்பத்தில் 5 ஆயிரம் பொலீஸாருக்கு ரிவால்வர்கள் வழங்கப்படும். (இ-எ)

24 ஆவது

## சோல் ஒலிம்பிக் முடிவு 33 உலக சாதனைகள்

### சோவியத்துக்கு 55 தங்கப்பதக்கங்கள் 2 ஆம் இடம் கி. ஜேர்மனிக்கு

சோல், அக்டோபர் 3

24 ஆவது சோல் ஒலிம்பிக் போட்டி நேற்று முடிவடைந்தது.

160 நாடுகள் கலந்து கொண்ட இப்போட்டியில் சோவியத் யூனியன் 55 தங்கப்பதக்கங்களைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்றது.

37 தங்கப் பதக்கங்களைப் பெற்ற கிழக்கு ஜேர்மனி 2 ஆவது இடத்தையும் 36 தங்கப்பதக்கங்களைப் பெற்ற அமெரிக்கா மூன்றாவது இடத்தையும் பிடித்தன.

33 உலக சாதனைகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

போதைவஸ்து பாவித்ததன் காரணமாக 10 வீரர்களுக்கு வழங்கப்பட்ட பதக்கங்கள் பறிக்கப்பட்டன.

அவற்றில் 3 தங்கப்பதக்கங்கள் ஆகும்.

100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டு உலகின் அதிவேக ஓட்டவீரர் என்று பெயர் பெற்ற பென்ஜோன்சனுக்கு வழங்கப்பட்ட தங்கப்பதக்கம் பறிக்கப்பட்ட சம்பவமே ஒலிம்பிக் போட்டியின் முக்கிய அம்சமாக இருந்தது.

### 53 ஊழியருக்கும் சம்பளம் வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், அக் 3

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சம்பளப் பணம் களவாடப்பட்டதை அடுத்து சம்பளப் பணம் பெறாத ஊழியர்கள் அனைவருக்கும் மீண்டும் சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்தத் தகவலை யாழ் சுகாதாரப் பணிப்பாளர் அலுவலக பிரதம கணக்காளர் திரு. எஸ் எஸ் ஞானசேகரம் உதயனுக்குத் தெரிவித்தார்

இந்தச் சம்பவத்தில் 53 ஊழியர்களின் சம்பளப் பணமான சுமார் ஒரு லட்சத்து 2 ஆயிரம் ரூபா களவாடப்பட்டுள்ளது. இதனால் 53 ஊழியர்கள் சம்பளம் பெறாத நிலையில் உள்ளனர் இவர்களது சம்பளமே வழங்கப்பட உள்ளது. (இ-9)

### அடுத்த ஒலிம்பிக ஸ்பெயினில்

சோல், அக் 3

அடுத்த ஒலிம்பிக் போட்டி 1992 ஆம் ஆண்டு ஸ்பெயினில் உள்ள பார்சிலோனியா நகரில் நடைபெறும்.

நேற்று சோல் ஒலிம்பிக் போட்டி முடிவில், ஒலிம்பிக் கொடி பார்சிலோனியா நகர மேயரிடம் சம்பிரதாய பூர்வமாக ஒப்படைக்கப்பட்டது. (இ-எ)

### உலக குடியிருப்பு தினம்

கொழும்பு, அக்.3

உலகக் குடியிருப்புத் தினமாக இன்றைய தினம் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. (க)

முச்சந்தி முரளி



எல்லாம் இடியப்பச் சிக்கலாய்த்தான் இருக்குது டாருங்கோ ... ...

வடக்கு -- கிழக்கு மாகாணசபைத் தேர்தலில்

# சகல தமிழ் அமைப்புகளும் போட்டியிடவேண்டும்

### "இந்திராகாந்தி" பாலப் திறப்புவிழாவில் -- ராஜீவ் அழைப்பு

சென்னை, அக். 3

சகல தமிழர் அமைப்புக்களும் வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட முன்வரவேண்டும்.

'இந்திராகாந்தி' பாலத் திறப்புவிழாவில் பேசுகையில் பிரதமர் ராஜீவ் காந்தி இவ்வேண்டுகோளை விடுத்தார்.

பாம்பனுக்கும் மண்டபத்துக்கும் இடையே கட்டப்பட்ட பாலத்தைப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்றுத் திறந்துவைத்தார்.

பாலத்துக்கு அன்னை இந்திரா காந்தியின் பெயர் சூட்டப்பட்டது.

அதன்பின்னர் நடந்த கூட்டத்தில் பேசுகையில் பிரதமர் மேலும் சொன்னதாவது:

சகல தமிழர் அமைப்புக்களும் ஆயுதங்களைஒப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு—கிழக்கு இணைந்த மாகாணசபைத் தேர்தல்:

# நியமனப்பத்திரங்கள் இன்று முதல் ஏற்றுக் கொள்ளப்படும்

யாழ்ப்பாணம், அக் 3

வடக்கு- கிழக்கு இணைந்த மாகாண சபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இன்று முதல் ஏற்றுக் கொள்ளப்படும்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கெனத் தனியாக அந்த மாவட்டங்களில் தேர்தல் அதிகாரியினால் நியமனப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கான நியமனப் பத்திரங்களை யாழ்ப்பாணத்தில் வைத்து ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன

இதற்கிடையில் வடக்கு- கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் போது வாக்குச் சாவடிகள், கச்சேரிகள், தேர்தல் பணியில் ஈடுபடும் ஊழியர்கள் ஆகியோருக்கு பாதுகாப்பு வழங்கும் பொறுப்பு இலங்கை அரசுக்கு உரியது என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்திய அமைதிப்படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஏ.எஸ். கல்கத கொழும்பில் இந்தியத் தூதரக அதிகாரிகளையும், இலங்கைப் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சேபால ஆட்டிக்கலையையும் சந்தித்து, வடக்கு - கிழக்கு நிலைமை பற்றி விவரித்தார்.

தேர்தலின் போது பாதுகாப்பு வழங்க இந்திய அமைதிப்படை தயாராக இருப்பதாக அப்போது லெப்டினன்ட் ஜெனரல் கல்கத் தெரிவித்தார். (இ-எ-ஐ)

## 8 கட்சிகள் கூட்டணிக்கு தேசிய மாணவர் நிலையம் நிபந்தனையுடன் ஆதரவு

கொழும்பு அக்டோபர் 3

புதிதாக அமைக்கப்பட்ட எட்டு அரசியல் கட்சிகளின் அணிக்கு சிங்களத்தில் தேசப்பிரேமி ஜாதிக பெரமுன என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்த அணிக்கு பெரும்பாலும் 'புறு' தேர்தல் சின்னமாகக் கிடைக்கலாம் என்று கூறப்படுகிறது.

இந்த அணிக்கு தேசிய மாணவர் நிலையமும் ஆதரவு தெரிவித்துள்ளது.

ஆனால் அணியில் சேர முடியாது என்று மாணவர் நிலையம் தெரிவித்தது.

பதவிக்கு வந்தவுடன் அமுல் செய்யும்படி சிலயோசனைகளை இந்த அணியிடம் தேசிய மாணவர் நிலையம் சமர்ப்பித்து உள்ளது.

அவையாவன:-

1 இந்திய - இலங்கை அமைதி ஒப்பந்தம் ரத்துச் செய்யப்படவேண்டும்.

2 அமைதிப்படை திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

3 மாகாணசபை முறை ஒழிக்கப்படவேண்டும்.

4 திறந்த பொருளாதாரக் கொள்கை வேண்டும்

5 இலவச கல்வித் திட்டம் மீண்டும் கொண்டு வரப்படவேண்டும்.

6 சகல அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும்.

7 சகல இனங்களும் சமமாக நடத்தப்பட வேண்டும்.

8 அரச மொழிகளாக சிங்களம், தமிழ் இருக்கவேண்டும். (இ-எ)

### ஈ. பி. ஆர். எல். எவ். போட்டி

கொழும்பு அக் 3

வடக்கு - கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அனைத்து '8' மாவட்டங்களிலும் ஈ பி ஆர். எல். எப் இயக்கம் போட்டியிடும் என்று அதன் தலைவர்களில் ஒருவரான திரு. வரதராஜப் பெருமாள் தெரிவித்தார். (இ-எ)

## தேர்தல் குறித்து படையினர் கருத்தறிவு

வவுனியா அக் 3

வவுனியாவில் உள்ள இந்திய அமைதிப் படையின் அதிகாரிகள் அரசாங்க திணைக்களங்களின் தலைவர்களைச் சந்தித்து தேர்தல் நடைபெறுவதற்கான சூழ்நிலைகள் குறித்து கருத்தறிந்துள்ளார்கள்.

பொதுமக்களைப் பொறுத்தமட்டில், தேர்தல் நடைபெறுமா என்பது குறித்து நிச்சயமற்ற ஒரு நிலைமையே இன்னும் தொடர்கின்றது.

இனம்புரியாத ஓர் அமைதியுடன் கூடிய மெல்லிய பதற்ற நிலையே காணப்படுகின்றது.

இதேவேளை இந்திய அரசின் ஒருதலைப்பட்சமான 10 நாள் யுத்த நிறுத்தம் முடிவடைந்த கடந்த ஒரு வார காலப் பகுதியில் வவுனியா மாவட்டத்தில் தேடுதல் நடவடிக்கைகளும் தடைமுகாம் சோதனைகளும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

திங்கட்கிழமை

சுபநேரம்:
12 02 முதல் 1 32 வரை
ராகுகாலம்:
07 32 முதல் 09 02 வரை
அட்டமி நவமி

## சுதந்திரக்கட்சி வென்றால் ஜே.வி.பி. ஆயுதங்களை ஒப்படைத்து விடுமாம்

கொழும்பு அக்டோபர் 3

ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வெற்றி பெற்றவுடன் ஆயுதங்களை ஒப்படைக்கப் போவதாக மக்கள் விடுதலை முன்னணி சுதந்திரக் கட்சிக்கு உறுதி மொழி வழங்கியிருக்கிறது.

இப்படி சுதந்திரக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன என்று சண்டே டைம்ஸ் செய்தி வெளியிட்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா சண்டே டைம்ஸ் செய்தியாளரிடம் தெரிவித்ததாவது;

எட்டு அரசியல் கட்சிகளின் ஆட்சி ஏற்பட்ட

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மயிலிட்டி மோதலில் இரு இளைஞர் பலி!

### மக்கள் வீதிமறிப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், அக் 3

இளைஞர் கோஷ்டி இரண்டுக்கிடையே ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டு மோதலில இரு இளைஞர்கள் கொல்லப்பட்டனர்

இதனை அடுத்து இந்த சம்பவத்தை எதிர்த்து மக்கள் வீதி மறிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவம் நேற்று மயிலிட்டிப் பகுதியில் இடம்பெற்றது.

இந்த வீதிமறிப்பு நடவடிக்கையினால் இந்தப் பகுதியில் வாகனப் போக்குவரத்துகள் ஸ்தம்பித்தன. யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி வீதி ஊடான காங்கேசன்துறை பஸ் சேவையும், பருத்தித்துறை - காங்கேசன்துறை பஸ் சேவையும் நேற்று நடை

(8 ஆம் பக்கம் பார்க்க)

### காந்தி பிறந்த தினம் அமெரிக்காவில் தேசிய தினம்

காந்திஜி பிறந்ததினத்தைக் தேசிய தினமாக கொண்டாடும் சட்டத்துக்கு அமெரிக்க அபதிர் றேகன் நேற்று கையெழுத்திட்டார்.

அதற்கு இணங்க நேற்று காந்திஜி பிறந்த தினம தேசிய தினமாக அமெரிக்காவில் அனுஷ்டிக்கப்பட்டது.

இச்சட்டத்தை அமெரிக்க நாடாளுமன்றம் கடந்த வாரம் நிறைவேற்றி அதிபர் றேகனின் அங்கீகாரத்துக்காக அனுப்பி இருந்தது.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

திறி ஏக்சர் பாம் ஒரு நாள் Hyline வெள்ளை நிறப் பேட்டுக் கோழிக் குஞ்சுகள் இம் மாதம் 28 ஆம் திகதியிலிருந்து விற்பனையாகிக் கொண்டிருக்கிறது. பதிவு செய்தவர்களும், செய்யாதவர்களும் காலை 9 மணியிலிருந்து 4-30 மணிவரையும். சுஜேராஸ் ஸ்தாபனம், இல. 21, வேம்படி ரோட், யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். (C 340)

ஐந்துமாத அல்சேசன் பெண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. நேரில் எந்நேரங்களிலும் பார்வையிடலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:- திரு இ அப்பையா, கட்டுவன் ரோட், மல்லாகம். (6903)

## மலிவு விற்பனை

மிகவும் நல்ல நிலையிலுள்ள ஜெனரேற்றர் 3 K. W [150 ரியூப் லைற் 2' ஒரே நேரத்தில் எரியக்கூடியது] கடைத் தேவைக்குரிய இரண்டு சேர்க்கேஸ் 4 X 2½ X 3 [முதிரை] வசந்தி எலக்ரிக்கல்ஸ் ,110, கே. கே. எஸ். ரோட் சுன்னாகம், (பழைய பொலீஸ் நிலையம் முன்பாக) (7068)

## புறெயிலர் குஞ்சு

புறெயிலர் குஞ்சுகள் 4ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தேவையான அளவு விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க. சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். (7066)

## திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printiug Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடகழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

## தவறிவிட்டது

திரு சி. கா. திருச்செல்வம், திருமதி சி. திருச்செல்வம், திருமதி சி. தம்பியையா, செல்வி ந. பாக்கியம் ஆகிய பெயர்களை உடைய காசோலைகள் 30-09-88ல் சங்கிலியன் சிலைக்கும் கச்சேரி - நல்லூர் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் அல்லது க. தம்பித்துரை 29, அரசவீதி, நல்லூர் என்ற விலாசத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். (6907)

குமாரசாமிக்குருக்கள்- சபாரத்தின குமாரசர்மா ஆகிய எனது அடையாள அட்டை இல: 500400161V தின்னவேலி ரோட்டிற்கும் கல்வியங்காடு சந்தைக்குமிடையில் ஆடியபாதம் ரோட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் சட்டநாதர் சிவன்கோவிலில் தயவு செய்து ஒப்படைக்கவும். (6904)

பிறவுண் வீதியில் கலட்டிச்சந்திக்கும் இந்து மகளிர் கல்லூரிச் சந்திக்குமிடையில் மூக்குக் கண்ணாடி தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நா. சோதிலிங்கம், சட்டடத் திணைக்களம், பிறவுண் வீதி, கொக்குவில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றேன். (7059)

## தேவை

ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பதற்குப் பெண் பிள்ளைகள் தேவை. மங்களபதி வைத்திய சாலை, அரசவீதி, பண்டாரகுளம் பிள்ளையார் கோயிலடி, நல்லூர். (6886)

எலச்றிக்கல் றீவைண்டிங், வயறிங் வேலைகள், எயர் கொண்டிசன் வேலைகள் பழக ஆர்வமுள்ளவர்கள் நேரில் வரவும். Omega, Manipay Road, Jaffna. (7064)

பிடவை வியாபார ஸ்தாபனத்திற்கு 35 வயதிற்கு மேற்பட்ட ஆண் விற்பனையாளர்கள் தேவை. நகரத்திலிருந்து 5 மைல் தூரத்திற்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. (மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் வேலை பழகுபவர்களும் விண்ணப்பிக்கலாம்) தொடர்பு; இல: 382, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (C/354)

## அரைச்சலார்

31-10-88 வரை விசேட சலுகை. உங்கள் குளிர்சாதனப் பெட்டிகளை ரூபா 600!- மாத்திரம் செலுத்தி ஒரு வருட உத்தரவாதத்துடன். GAS நிரப்பிக் கொள்ளுங்கள். OMEGA MANIPAY ROAD, JAFFNA. (7065)

## சுஜேரா ரவல்ஸ்

மேற்கு ஜேர்மனி (West Germany) க்குச் செல்ல விரும்பும் 25 வயதிற்கு உட்பட்டவர்கள் தாமதியாது சுஜேராஸ் ஸ்தாபனம் No:21 வேம்படிரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (C341)

## சுபமங்களமாலை

இறைவனால் தீர்மானிக்கப்பட்ட உங்கள் பிள்ளைகளின் திருமணங்கள் எங்களின் இடைவிடாத முயற்சியினால் வெகுவிரைவில் தீர்த்து வைக்கப்படலாம். விபரங்களுக்கு No: 11. பிறவுண் ரோட், ஸ்ரேசன் வியூ கொக்குவில். (7069)

## Spoken English

புதியபிரிவு தூர இடங்களிலிருந்து வருபவர் வசதியை முன்னிட்டு நேரம் பகல் 2மணி- 4மணி; நாட்கள் திங்கள், புதன் ஆரம்பம்: 3- 10- 88. S. B. Iyar வைமன் வீதி, நல்லூர். (6864)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் திருமதி தாமோதரம்பிள்ளை சிவக்கொழுந்து அவர்கள்

தோற்றம்: 8-4-1927
மறைவு: 8-10-1986
திதி: 3-10-1988

உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.
கணவன், மகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தாய், சகோதரர்கள்.
16, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.
[6913]

---

எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

✶ சத்தியன் ✶ ஜீவிதா ✶ செந்தில்
1. "வளைகாப்பு"

✶ ஜெய்கணேஷ் ✶ ராதிகா ✶ கவுண்ட மணி
2. "பருவத்தின் வாசலிலே"

✶ விஜயகாந் ✶ ராதிகா
3. "நல்லவன்"

✶ அர்ஜுன் ✶ பவ்யா
4. "என்உயிர் நீதானே"

இன்றைய வெளியீடு
கமலஹாசன் ✶ நிரோஷா
"சூரசம்ஹாரம்"
(Pyramid Original)

ஏனைய இவ்வார வெளியீடுகள்:
1. மனிதரில் இத்தனை நிறங்களா?
2. மதுரை வீரன (Venus Original)
3. எங்கஊரு ராஜா (Santh Original)
4. தேவதாஸ் (V.G.P. Original)

அடுத்த வெளியீடு:-
கமலஹாசன் வழங்கும்
பாலச்சந்தரின்
"உன்னால் முடியும் தம்பி"

# குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(C/355)

---

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



டாக்டர்
முத்தையா கனகசிங்கம்
தோற்றம்: 26 - 04 - 1925 மறைவு: 03 - 10 - 1983
மனைவி, மக்கள், மருமகன், பேரன்.
'பத்மகிரி'
கட்டுடை, மானிப்பாய். (6911)

---

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்



ஸ்ரீமதி திரவியசிங்கம் தவமலர்

மலர்வு: 17-01-1943 உதிர்வு: 03-09-1988

3-10-1988 திங்கட்கிழமை இன்று காலை வதிரி பூவற்கரை விநாயகர் ஆலயத்தில் நடைபெறும் கிரியையில் உற்றார், உறவினர்களும் பங்குபற்றி அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்

பிரிவால் வாடும்
சி. திரவியசிங்கமும், பிள்ளைகளும்

'மலர்வனம்'
அல்வாய் தெற்கு,
வதிரி.
[7171]

---

யாழ். மாவட்டத்தில்

# மக்கள் சுகாதார வசதிகளை விஸ்தரிக்க நடவடிக்கை

## சர்வதேச அமைப்புக்கள் ஏற்பாடு

மானிப்பாய் அக் 3

போரூட், றெட்பாணு, சர்வோதய இயக்கம், ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள மக்களின் சுகாதார வசதிகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

அண்மையில் இந்நிறுவனங்களின் ஒன்றியம் யாழ்ப்பாணத்தில் உள்ள சுமார் 315 ஆரம்ப சேவை சுகாதாரதொண்டர்களுக்கு ஆறு மாதகால சுகாதார பயிற்சிகளை வழங்கியதோடு அவர்களுக்கு பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ்களையும் வழங்கியிருக்கிறது.

இவ்வமைப்புக்கள் இது வரை சுமார் ஆயிரத்து 300 ஆரம்ப சுகாதார சேவைத் தொண்டர்களுக்கு இவ்வாறான பயிற்சிகளை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இவை யாழ்ப்பாண மாவட்டத்தில் 378 சத்துணவு வழங்கும் நிலையங்களை அமைத்து அவற்றின் ஊடாக யாழ் மாவட்டத்தில் உள்ள சுமார் 50 ஆயிரத்துக்கும் அதிகமான கர்ப்பிணிப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கி வருவதாக இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-90)

## கிளிநொச்சி ம.ம.வித்தியாலயம் முதலிடம்

யாழ்ப்பாணம், அக். 3

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கமும். யாழ்ப்பாண பல்கலைக் கழகமும், கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளிடையே நடத்திய விஞ்ஞான அறிவுப் போட்டிகளில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றது

விஞ்ஞானப் பேச்சுப் போட்டியில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மாணவன் செல்வன் மா. குகராசா முதலாம் இடத்தைப் பெற்றார்.

விஞ்ஞான வினாடிவினா விடைப் போட்டியில் கிளிநொச்சி மத்தியமகா வித்தியாலயக் குழு முதலாமிடத்தைப் பெற்றது. (ச-144)

## வாகன வரி பத்திரம் இன்று முதல்

கொழும்பு, அக் 3

1989 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன வரி அனுமதிப் பத்திரங்கள் இன்று முதல் வழங்கப்படும்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி பத்திரங்களைப் பெறவேண்டும் என்றும்-

அதற்குப் பின்னர் மேலதிக கட்டணத்தைச் செலுத்தியே பெற்றுக் கொள்ளமுடியும்என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-க

## முல்லைத்தீவில் வீதிகள் திருத்தம்

மாங்குளம். அக். 3

முல்லைத்தீவு மாவட்டத்தில் சில பகுதி வீதிகள் திருத்தப்படுகின்றன. இவ் வீதி திருத்த வேலைகளுக்கு மேலதிகநிதியாக 20 லட்சம்ரூபா வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்நிதியில் புளியங்குளம்-முல்லைத்தீவு வீதி, மாங்குளம்- பனங்காமம் வீதி, யாழ்ப்பாணம்- கண்டி வீதி, மாங்குளம்- முல்லைத்தீவு வீதி ஆகிய வீதிகள் திருத்தப்படுகின்றன.

முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு கே. பொன்னம்பலம் பன்முக வரவு செலவு நிதியிலிருந்து வீதி புனரமைப்பு வேலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்.

இந்நிதி மூலம் மாங்குளம்-துணுக்காய் வீதி, விநாயகபுரம்-துணுக்காய் வீதி. தென்னியங்குளம்- துணுக்காய் வீதி ஆகியவை திருத்தப்படும்.

திருத்த வேலைகளை மாங்குளம் வீதி உத்தியோகத்தர் திரு. பி சேதுராமன்மேற்பார்வை செய்து வருகிறார். (உ-94)

## 'யானை விலையில்' எரு; விவசாயிகள் பெரும் பாதிப்பு

கொக்குவில், அக். 3

கடந்த கால அசம்பாவிதங்களாலும் அண்மைய கோமாரி நோயினாலும் பெருமளவு கால்நடைகள் இறந்தன அவற்றின் இனவிருத்தியும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இதனால் இப்பகுதியில் எருவுக்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் பெரும் பாதிப்பு அடைந்துள்ளனர்.

வெளியிடத்திலிருந்து கொண்டுவரப்பட்ட எருவும் யானை விலையாகவுள்ளது. ஒரு லொறி 'லோட்' எரு மூவாயிரத்து ஐநூறு முதல் நான்காயிரதது ஐநூறு ரூபா வரையில் விலை போகின்றது

இவ் வருடம் பயிரிட்ட புகையிலை எதிர்பார்த்த விலை போகாததாலும் இன்னும் விற்பனையாகாமல் சில விவசாயிகளிடம் தேங்கிக் கிடப்பதனாலும், பெரும் பணத் தட்டுப்பாடு விவசாயிகளிடையே நிலவுகிறது.

இம்முறை நிலத்தைப் பண்படுத்தி பயிரிடுவதற்கு வழிவகை தெரியாது சிறு விவசாயிகள் திணறுகிறார்கள்.

கடந்த வருட அசம்பாவிதத்தின் போது அழிந்த பயிர்களுக்குரிய நிவாரணம் வழங்குவதற்கு படிவங்கள் நிரப்பப்பட்டுஅனுப்பப்பட்டபோதிலும் இதுவரை நிவாரணம் எதுவும் கிடைக்கவில்லை,

உரிய காலத்தில் இது வழங்கப்படுமாயின் ஓரளவு இம்முறைப் பெரும் போகத்தைச் செய்ய உதவியாக இருக்குமென இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ஒ-69)

---

# The St. John Ambulance Association of Sri Lanka,

J/Mahajana College Division
Tellippalai.

## முக்கிய அறிவித்தல்

வடமாகாணப் புற்று நோயாளர் விடுதி நிதிக்காக மகாஜனக் கல்லூரிப் பிரிவு ஆதரவில் நேற்று (02-10-1988) நடைபெறுவதாக இருந்த ''தெய்வீக இராகங்கள்'' நிகழ்ச்சி கடைசிநேரத்தில்ஏற்பட்ட தவிர்க்க முடியாத காரணத்தினாலும், எம்மால் மீற முடியாத காரணத்தினாலும் நடத்த முடியாமற் போய்விட்டது. எமது முதலுதவிப்பிரிவு அங்கத்தவர்களால் இந் நிதிக்காகச் சேகரிக்கப்பட்ட பணம் முழுவதும் வடமாகாணப் புற்று நோயாளர் சங்கத் தலைவர் டாக்டர் ம ஜெகநாதனிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எமது பிரிவு கேட்டுக் கொண்டதற்கிணங்க எமது அன்பு மக்கள் வழங்கிய பெருந்தொகையான நிதிக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தடைப்பட்ட இந் நிகழ்ச்சி நடத்தப்படுவது பற்றி பின்னர் அறிவிக்கப்படும். பொதுமக்களாகிய உங்களிடம், இந்நிகழ்ச்சி தடைப்பட்டதற்கான சூழ்நிலையை உணர்ந்து எம்மை மன்னித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பிரிவு அத்தியட்சகர்

(6915)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி







**திரு. சின்னத்துரை சிவசுப்பிரமணியம்**
(இளைப்பாறிய நீர்ப்பாசன அதிபர்)
தோற்றம்: 11 - 10 - 1928

**திருமதி தவமணி சிவசுப்பிரமணியம்**
(இளைப்பாறிய ஆசிரியை)
தோற்றம்: 13 - 11 - 1929

**செல்வன் சிவசுப்பிரமணியம் சிவசங்கர்**
(வைத்திய பீட மாணவன், யாழ். பல்கலைக்கழகம்)
தோற்றம்: 23 - 03 - 1967

அழிப்பு: 16 - 10 - 1987
திதி: 04 — 10 — 1988

எம்மையெல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வங்களே. நீங்கள் மறைந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டு என்றும் அகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
சகோதர, சகோதரிகள், மைத்துன, மைத்துனிகள், மாமன்மார்கள், மாமிமார்கள். பெரியதாய், சிறியதாய்மார்கள், சித்தப்பாமார்கள்.
கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். (6914)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**Immediate Vacancies in**

# SAUDI ARABIA

1. Work Schedullar (Preventive Maintenance of Air Condition)
2. HVAC Split Units/Central A/C Tech. — 800SR—1000+100 F.A.
3. A/C Technicians — 700SR—800+100 F.A.
4. Boiler Technicians — 800SR—1000+100 F.A.
5. Home Appliances (Electrical Equipment) Technicians— 700SR—800+100 F.A.
6. Electronic Technicians— 750SR—900SR
7. Cleaning Equipment Mechanics — 700—800+100 F.A.
8. Heavy Equipment Mechanic (Buldozer Exauator Crane Etc)— 900 SR+200 F.A.
9. Secretary/Typist — 700SR+100 F.A.
10. Air Compressor Mechanic— 800—900+100 F.A.
11. Plumbers — 600SR+150 F.A.
12. Painter — 500SR&150 F.A.
13. Carpenter — 550&150 F.A.
14. Generator Electricians — 600&150
15. Site Supervisors — 600&150 F.A.
16. Building Electrician — 600&150 F.A.
17. Swimming Pool Attendent- 700SR+150FA.
18. A/C Technician 750+150 F.A.
19. Civil Supervisor 600+150 F.A

Please Call over at Jaffna Office with Certificate and Passport at your earliest.

Interview will be held in Colombo on 1st, 2nd, 3rd and 4th of October, 1988

**Flight will be arranged within 15 days.**

## T V TRAVELS & TOURIST

[Front of Railway Station]

**Brown Road, Kokuvil, Sri Lanka.**

(C/93)


# முஸ்லிம்களுக்குத் தனியான ஆசிரியர் கல்விக் கல்லூரி

## நிறுவுமாறு கல்வி அமைச்சரிடம் கோரிக்கை

அம்பாறை, அக். 3

முஸ்லிம் ஆசிரியர் கல்விக் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கு உடன் ஆவன செய்யுமாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சரைக் கோரியுள்ளது.

இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கத்தலைவர் ஜனாப். எம். வை. ஏ. பாவா மகஜர் மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கல்வி அமைச்சரின் புதிய கல்விக் கொள்கைகளுக்கு ஏற்ப நாட்டில் பல கல்விக் கல்லூரிகளை ஸ்தாபித்து, அதில் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தும் பல்கலைக் கழக அனுமதிகிடைக்காத மாணவர்களுக்கு ஆசிரியநியமனம் வழங்கி, அவர்களுக்கு கல்விக்கல்லூரிகளில் இரண்டு வருடம் பயிற்சி அளித்த பின்னர் பாடசாலைகளுக்கு நியமனம் செய்யும் திட்டம் அமுல்நடத்தப்படுகின்றது.

இந்தத்திட்டத்தின் கீழ் இதுவரை சிங்கள மொழி மூலம் பேசிக்கும் ஏழு கல்விக்கல்லூரிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

இதே திட்டத்தின் கீழ் முஸ்லிம் மாணவர்களைப் பயிற்றுவிப்பதற்காக கல்வி அமைச்சினால் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையை கல்விக்கல்லூரியாக மாற்றுவதற்குரிய சிபாரிசுகள் செய்யப்பட்டு நிதியும் ஒதுக்கப்பட்டன.

1985ஆம் ஆண்டில் இக் கல்லூரியைத்திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடும் செய்யப்பட்டன.

ஆனால் கிழக்கில் பயங்கரவாதச் சம்பவங்களைக் காரணம் காட்டி இக்கல்லூரியைத் திறப்பது பின் போடப்பட்டது.

தற்பொழுது அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலைக்கு நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் பயிற்சி ஆசிரியர்கள் பயிற்சிக்குப் போகமுடியுமாயின், கல்விக்கல்லூரியைத் திறப்பதிலும் பிரச்சினை எதுவுமில்லை.

எனவே அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலையில் முஸ்லிம் ஆசிரியர் கல்விக்கல்லூரியை நிறுவ உடன் ஆவன செய்யுமாறு ஜனாப். பாவா தமது மகஜரில் வலியுறுத்தியுள்ளார்.

முடியாதபட்சத்தில் அக்கரைப்பற்று முஸ்லிம் மகளிர் ஆசிரிய கலாசாலையிலோ அல்லது இலங்கையின் எப்பகுதியிலாவது இக் கல்லூரியை ஆரம்பிக்குமாறும் அவர் கோரியுள்ளார். (ஒ-14)

## சிரமதானம்

சுழிபுரம், அக் 3

சுழிபுரம் இருத்தலடி திருவடிநிலை தமிழ்க்கலவன் பாடசாலை வரை செல்லும் பாதை இருபக்கங்களிலும் நிறைந்திருந்த பால் கள்ளி மரங்கள் சிரமதான முறையில் வெட்டித் துப்பரவு செய்யப்பட்டுள்ளது.


## சஞ்சீவி பொது அறிவுப் போட்டி இல: - 13

சரியான விடைகளை ஒரே ஒருவர் மட்டுமே அனுப்பியிருந்தார். அவருக்கு முதலாம் பரிசு வழங்கப்படுகின்றது.

பரிசு பெறுபவர் பெயர் வருமாறு;

ப. கௌரீஸ்வரி,
மே/பா ஆர் பரராஜசிங்கம்,
லோட்டன் வீதி,
மானிப்பாய்.


# குரவர்களாக தெரிவான இருவருக்குப் பாராட்டு

பருத்தித்துறை, அக். 03

"புதிய குரவர்கள் இருவரிலும் புனித சமேரியரில் காணப்பட்ட ஆத்மீகத் தாகமும், நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரிடம் காணப்பட்ட நற்செய்தி பரப்பும்திறனும் காணப்படுகின்றன."

யாழ். மறை மாவட்டத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியில் முதற் குருப் பிரசாதிகளாகத் திருநிலைப் படுத்தப்பட்ட சரவையூரைச் சேர்ந்த அருட் திரு. ஞானரத்தினம் அடிகளார் யாழ். நகரைச் சேர்ந்த அருட்திரு லோறன்ஸ் அடிகளார் ஆகிய இருவருக்கும் பருத்தித்துறை பங்கின் மக்கள் சார்பில் அண்மையில் வரவேற்பு உபசாரம் நடத்தப்பட்டது.

அதில் உரையாற்றிய அதிபர். திரு. தோ. செபமாலை மேற்கண்டவாறு கூறினர்.

வரவேற்புபசாரத்தில் முன்னாள் நகரசபை உறுப்பினர் திரு.எம். எப் வின்சென்டி போல, அதிபர் திரு ச. ஜோஷ்வா ஆகியோரும் கலந்து கொண்டு புதிய குரவர்களை வரவேற்று வாழ்த்தினர். (ச-118)

## குருநகர் கடற்கரை வாடி அபிவிருத்தி

குருநகர், அக். 3

மீன் சந்தைப் படுத்தும் குருநகர் கடற்கரை வாடி அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

கூத்தவையாளர் சங்கம் இதனைமேற் கொண்டுள்ளது.

புதிதாகப் படிப்பகம் ஒன்றும், பொது அறிவித்தல் பீடமொன்றும் அமைக்கப்பட்டுள்ளன. (ஒ-51)


# VACANCIES IN SAUDI ARABIA

1. Work Schedu'lar
2. Have Split Units / Central A/C - Technicians 800 — 1000 & 100
3. Air Condition Technicians 700 — 8 0 & 100
4. Boiler Technicians 800 — 1000 & 100
5. Home Appliances (Electrical Equipment) Technicians 700 — 800 & 100
6. Electonic Technicians 750 — 900
7. Cleaning Equipment Mechanics 700 — 800 & 100
8. Heavy Equipment Mechanics 900 & 200 (Buldozor, Exauator Crane Etc)
9. Secretary / Typist 700 & 100
10. Air Compressor Mechanic 800 & 900 & 100
11. Plumbers 600 & 150
12. Painter 500 & 150
13. Generator Electricians 600 & 150
14. Site Supervisors 600 & 150
15. Building Electricions 600 & 150
16. Swimming Pool Attendent 700 & 150
17. A/C Technicians 750 & 150
18. Civil Supervisor 600 & 100

தொடர்பு:-

## கோல்டன் ரவல்ஸ் அன் ரூர்ஸ்

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

குப்பிளான். வல்வெட்டி.

(C/350)





உறுதியான அடித்தளத்தில் உன்னதமான வளர்ச்சி

## நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,317,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,356 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,208,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரிசெலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

நம்பிக்கை நாணயத்தின் சின்னம்-ஷப்ரு

இலங்கை மத்திய வங்கியின் விதிகளுக்கு அமைய அதிகரிக்கப்பட்ட புதிய வட்டி வீதங்கள்

## நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

பணிப்பாளர் சபை

திரு. எல். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்,
A. I. B., (Lond.). முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்,
A. I. B., (Lond.). பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி,
B. A. (Hons.)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்.

## SHABRA UNICO FINANCE LIMITED

61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL: 589310, 500576.

ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.

யாழ் முகவரி: [illegible] யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



வல்வை
திரு. வ.வ. இராமசாமிப்பிள்ளை (வ இ)
[ஆர். வி. ஜி. ஸ்தாபனங்களின் ஸ்தாபகர்]

மண்ணுலகில் 11 - 03 - 1898 விண்ணுலகில் 26 - 09 - 1986

எங்கள் எல்லோருக்கும் வளமான வாழ்வளித்த தெய்வமே! எமக்கு நல்வழி காட்டி, அன்பு அறநெறி, பண்பு, பாசத்துடன் வாழ்ந்த தெய்வமே, எம்மை விட்டுப் பிரிந்து இரண்டாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு எங்கள் உள்ளங்களில், அகல்விளக்காய் அணையாத் தீபமாய் என்றும் ஒளிர்கிறது.

மீளாத்துயில் கொண்டாலும் உங்கள் நினைவை என்றும் நினைவில் நிறுத்துகிறோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனை இறைஞ்சுகிறோம்.

என்றும் உங்களை நினைவு கூரும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்கள், வல்வை மக்கள்.
(7113)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி சாந்திமதி யோகநாதன்

உயர் திரு சோமசுந்தரம் – யோகநாதன் (வடபிராந்திய போக்குவரத்துச்சபை யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவி

தோற்றம்: 1956 - 04 - 23 மறைவு: 1987 - 10 - 14
திதி: 1988 - 10 - 03

அன்புத் துணைவியே! பாசத்தின் உறைவிடமாய் குடும்பத்தின் ஒளிவிளக்காய், அன்பு மொழி பரப்பி எங்களை வழி நடத்திய அன்புத் தெய்வமே! உமது பூதவுடல் எம்மைப் பிரிந்தாலும் இன்றும் எம் முடனேயே இருந்து நல்லருள் புரிந்துவரும் உமது அன்பை எமது வாழ் நாள் பூராவும் மறவோம், ஆண்டு ஒன்று சென்றாலும் உங்கள் அன்பும் சிரித்தமுகமும் எம் மனதை விட்டகலா. இறைவனுடன் சாந்தியமாகிய உமது ஆத்மா நித்திய சாந்தியும் அமைதியும் பெற எல்லாம் வல்ல இறைவனின் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி; ஓம் சாந்தி!!

அன்பு நீங்காத கணவன், பிள்ளைகள், பெற்றோர், சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள்.

''சோம வாசா''
ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
(6852)

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 1969. 03. 10
உதிர்வு: 1987. 10. 14

செல்வன் தியாகராசா பிரகலாதன்
(செல்வன்)

எம்துயர் தீர்ப்பாய் செல்வா, உனை நாம்நம்பியிருந்து ஏமாந்தோம்; நினை செல் அம்பு துளைத்து ஈழமண்ணிற்கு எருவாய் தம்பியின் தாளையில் ஒருவனுய் ஏகிய உனக்காணுது அழுகின்றோம். தினம் தினம் மாள்கின்றோம்.

தந்தை, தாய், தம்பியர்,
தங்கை, உறவினர்.

அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். (6878)

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி மேரிகிருபையம்மா இராஜக்கோன்

மலர்வு: 05 - 08 - 1917 உதிர்வு: 03 - 10 - 1975

அன்னையுமாய் அத்தனுமாய்
அன்பால் அமர்ந்து,
அமுதூட்டி, அறிவூட்டி, உயர்வை ஊட்டி,
பன்னரிய பாசத்தின் உருவாய் நின்று,
ஏற்றி வைத்தாயே எங்களை
அவனியின் உச்சியிலே.

அன்புப் பிள்ளைகள்

ஏழாலை வடக்கு,
ஏழாலை.
யாழ்ப்பாணம். (6627)

## ஓராண்டு நினைவஞ்சலி



திரு. வேலுப்பிள்ளை விசுவப்பிள்ளை
(இளைப்பாறிய பொது மராமத்து இலாகா (P. W. D) உத்தியோகத்தர்)

ஆண்டவன் படைப்பு: 30 - 10 - 1911
அநியாய அழிப்பு: 15 - 10 - 1987

அன்பின் சிகரமாய், பாசத்தின் உறைவிடமாய் எங்கள் ஒளிவிளக்காய் எம்மை எல்லாம் வழிநடத்திய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
புன்னாலைக்கட்டுவன் ...
தெற்கு

### இவர்களுக்கு சேவைமுன் பயிற்சி விரைவில்!

யாழ்ப்பாணம், அக். 3

விஞ்ஞான — கணித ஆசிரியர்களுக்கான சேவைக்காலமுன் பயிற்சி விரைவில் நடைபெறவுள்ளது.

அவர்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் முடிவு அடைந்துவிட்டன என்றும்—

சேவைக்கால முன்பயிற்சி முடிவடைந்ததும், நியமனங்கள் யாழ்ப்பாணத்திலேயே வழங்கப்படும் என்றும் யாழ். கல்வித்திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சையின் போது கேட்கப்பட்டு இருந்த தஸ்தாவேஜுக்கள் அனைத்தும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது நிச்சயம் என்றும் அந்த அதிகாரி மேலும் சொன்னார். (ஒ-க)

### கடவுச்சீட்டு யாருடையது?

யாழ்ப்பாணம், அக் 3

குமாரசாமி வேலாயுதபிள்ளை என்பவரது கடவுச்சீட்டு வவுனியாவில் யாழ்தேவி ரயிலில் இருந்து கண்டு எடுக்கப்பட்டு உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கடவுச்சீட்டுக்குரியவர் உதயன் காரியாலயத்துக்கு நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். (ஒ)

### கரவெட்டியில் கோமாரி தடுப்பு ஊசி

யாழ்ப்பாணம், அக் 3

கரவெட்டி பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி ஏற்றப்பட உள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை அந்தப் பகுதிக்குப் பொறுப்பான கால் நடை வைத்தியர் மேற் கொண்டுள்ளார்.

இதற்கமைய நாளை 4 ஆம் திகதி காலை 6 மணியளவில் கரவெட்டி கன்பொல்லையில் வைத்து இந்தத் தடுப்பூசி ஏற்றப்பட உள்ளது.

எனவே இந்தப் பகுதி வாழ் கால்நடை உரிமையாளர்கள் குறிப்பிட்ட தினத்தில் தமது கால் நடைகளைக் கொண்டு வந்து கோமாரி தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## 5ஆவது ஆண்டு நினைவஞ்சலி



ஸ்ரீமான் ஆறுமுகம் செல்வரட்ணம்
(முன்னாள் - வெலிங்டன் படமாளிகை முகாமையாளர்)

தோற்றம்: 05 - 03 - 1929
மறைவு: 29 - 09 - 1983

ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி. (7111)


## வெளிவந்துவிட்டன!

நவராத்திரியை முன்னிட்டு சிறந்த இசையமைப்புடன்
பொன்.சுந்தரலிங்கம் சகோதரர்கள் பாடிய
**சகலகலாவல்லி மாலை பாடல்கள்**
பதிவு செய்யப்பட்ட ஓடியோ கசற்றுகள்
வெளி வந்துள்ளன.
இன்றே உங்கள் கசற்றுக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்!
விலை ரூபா 35/-

வெளியீடுவோர்:
விக்ரேஸ் மியூசிக் சென்ரர்
887, ஆஸ்பத்திரி வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

விக்ரர் அன் சன்ஸ்
இல. 100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பொன் சுந்தரலிங்கம்
கேணியடி, திருநெல்வேலி.
(C 344)


## ஓராண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை சண்
(ஜெயராஜா ஜெயசீலன்)


ஜனனம்: 2 - 10 - 70 மரணம்: 15 - 10 - 87
திதி 3 - 10 - 88

ஓர் ஆண்டு சென்றதய்யா எங்கள் உள்ளம் துடிக்குதைய்யா
தேடிக்கிடைபாத எங்கள் அன்புத் திரவியமே
தாயக மண்மீட்கச் சென்ற தியாக தீபமே சீலா
வீரத்துடன் களம் புகுந்த உன்னை மீண்டும் வருவாய் என்று
கண்ணீருடன் காத்திருந்தோமையா ஆனால்
நீ வர மறுத்து விட்டாய்
உன் கடமையிலே சண்ணியமாய் நடந்த கடமை வீரனே
உன் சொல்லை நிறைவேற்றி விட்ட அரிச்சந்திரனே
என்றும் உன் தியாகம் என்றும் உன் வீரம்
எல்லோர் இதயத்திலும் என்றும் நிலைக்கும் ஐயா!
எங்கள் இதயக் கோயிலே எங்கள் கண்களில் நாள்தோறும்
சொரியும் கண்ணீர் வெள்ளத்தில் நீந்திவிளையாட ஓடிவா மகனே
எங்கள் வீரச்செல்வமே! குடும்பத்துக் குல விளக்கே
உன் ஆத்ம சாந்திக்காக கண்ணீரால் அர்ச்சனை செய்கின்றோம்.

உன் இழப்பை தாங்க முடியாமல் துடித்து நிற்கும்
அப்பா, அம்மா, (லண்டன்) அண்ணா,
தம்பி தங்கைமார்,
அப்பப்பா குடும்பத்தினர்,
அம்மம்மா குடும்பத்தினர்,
உற்றார், உறவினர்.

நாவற்குழி கிழக்கு,
தச்சன்தோப்பு. (6880)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திரு. கந்தையா இராமலிங்கம்
(பொற்பதி வீதி, கொகுவில் கிழக்கு)

தோற்றம்: 13 8-1903 மறைவு: 3-9-1988

3 – 10 – 1988 திங்கட்கிழமை நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்திய வைபவத்தில் உற்றார், உறவினர், நண்பர்களைக் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் மரணச் சடங்கில் பங்கு பற்றியவர்களுக்கும் அனுதாபத்தை தெரிவித்துக் கொண்டவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் வாடும்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பத்தமேனி
அச்சுவேலி.
(C/348)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துக்கள்!

## "நெஸ்டம் அழகான இல்லம்"

போட்டியில் வெற்றிபெறும் முதல் 100 அதிர்ஷ்டசாலிகள் இதோ!

★ நிரோஷ் பூர்ண சஹிகெவ, 239. கொட்டா வீதி. பொரளை.
★ பிரீதி ஜயசூரிய, 353. நீர்கொழும்பு வீதி, மல்கடுவ, குருநாகல்.
★ ரெுயிலா செல்லதுரை, 33, பண்டாரநாயக்க பிளேஸ், புஸல்லாவ.
★ புஷ்பா ஹெட்டியாராய்ச்சி 564, பாணந்துறை, ஹொரண.
★ மந்திரி மென்டிஸ், 24, லெடபோய் வீதி, நுவரெலியா.
★ சஞ்ஜினி சரவீர, 27, 'பி' அநுர மாவத்தை அண்டேர்ஸன் வீதி. களுபோவில.
★ மொஹமென் ஷாம் நஸீர், 221/6, சொட்டா வீதி, சொழும்பு-8.
★ புத்திம பவித்ர நாணயக்கார, சி 3, மத்திமகேவத்தை வீதி, நுகேகொடை.
★ எஸ், ஹேரத் 23, டி சில்வா வீதி. களுபோவில. தெஹிவளை.
★ எல் வை. எஸ். எம். விக்கிரமசிங்க 49 டெம்பிள் வீதி. கழுத்துறை வடக்கு.
★ மனிக் லியனக்கே, 6-டி, சமிற் மாடி வீதி, கெப்பிற்றிபொல மாவத்தை, கொழு 5.
★ ஷேருன் செலர், 148/5, அண்டர்ஸ்ன் வீதி, நெதிமால, தெஹிவளை.
★ சரஞ்சினி பெரேரா, 87, ஸ்டேசன் வீதி, கல்கிசை.
★ நிர்ஷான் வீரரத்தின, 14. முதலாம் ஒழுங்கை, இரத்மலானை.
★ ருக்குமணி ரெுட்ரிகோ, "ருக்மல்", 120, சென். ஜோசெப் வீதி, நீர்கொழும்பு,
★ சமிலா சூளதுங்க, 12ஏ, முதலாம் ஒழுங்கை. பாகொடை வீதி, நுகேகொடை.
★ சுவர்ண ஹிகம, இல. 311, எடதுவாவ, பேராதனை.
★ சுமித்ரா அபேசிங்கா. சுசன" வெனனப்புவ.
★ பாமிலா தாபரே, "கிறேவின்", நாகொட. சந்தானை.
★ உமங்கா செனவிரத்ன. 5. கவிந்தா பிளேஸ், கிருலப்பனை, கொழும்பு-6.
★ ஏ ஸாஹ்றெுவ், 623/8ஏ, நாவலை வீதி. ராஜகிரிய.
★ எச். மரவக்க, 170, பெரகும் மாவத்தை, பொருப்பனை வீதி, இரத்மலானை.
★ ஆர். அவுட்ஸ்ோன், 97/5, திலகா கார்டின்ஸ். நுகேகொடை.
★ எல். டி. செனவிரத்ன, 18, பி ரி, டி. சில்வா மாவத்தை, தெஹிவளை.
★ சரண சுஸந்தன். 9பி, எலிபாங்க் வீதி, கொழும்பு-5
★ ஸ்ரீநாத் சி. வைத்தியதிலக, ரில்ஹேன அரசபெருந்தோட்டம், பெலஸதுல்ல.
★ ஹவ்லா ஹஸன், 43 லில்லி அவெனியூ, கொழும்பு6.
★ அருண குருஹே, 37/1, ஹில் வீதி, தெஹிவளை.
★ ஹிஸ்ணி ஏ. முஸாமில், 21, பெர்னாண்டோ, கார்டின்ஸ், சேனநாயக்க பிளேஸ், தெஹி.
★ டி. எஸ். பி. கே. இந்திகா டி சில்வா, 'கிரிமெதுர", 8 ஆம் மைல் கட்டை, பட்டபொலா வீதி, கரந்தெனியாய.
★ நிஸ்வி பின் அலி, இல. 9/30, பெரேரா மாவத்தை, திவுலப்பிட்டிய, பெராஸஸ்கமுவ.
★ ஜெரோம பி. டி. சில்வா, 93, அல்விஸ் டவுண், ஹெந்தளை.
★ எ. பி. ஹெடடியாராட்சி, 83. ஸ்ரீ விக்ரம மாவத்தை வத்தளை.
★ ஸீனுத் அம்ரா ஹஸன், 18 1/1, மைல் கட்டை அவெனியூ: கொழும்பு-3.
★ ஏ. நக்தானியேலஸ். 2, கோமஸ் பாதை, கொழும்பு-5.
★ ரோஹினி தயாரத்ன, 527, பிற்ற கோட்டே. கோட்டே
★ சி. எஸ். சமரவீர, 12. மெல்டர் பிளேஸ், நுகேகொடை,
★ தானியா டி சில்வா, 24 பப்டிஸ்ட் ஒழுங்கை, பத்தேகம வீதி, பிற்ற கோட்டே.
★ எஸ், ஈ பெரேரா. 142 /17, தேவிக கார்டின்ஸ், பொல்ஹெங்கொட வீதி, கொ5'
★ மொஹமென் சபான், 9, சுப்பர் மார்க்கெட். புத்தளம்.
★ சுல்பான் மொஹமென், 60, வான் வீதி புத்தளம்,
★ பிரியந்தி விஜேரத்ன, 312/2, வளலவத்தை. தந்திரிமுல்லை, பாணந்துறை,
★ அஸிம் ஹமீத், 82. ஏஸ் மகிந்த மாவத்தை, கொழும்பு-10
★ தெரேஸ் லெய்டன், 120, புதிய புள்ளர்ஸ் வீதி, கொழும்பு-4
★ திமித்ரி பெர்ணண்டோ, 15 காஸில் வீதி, கொழும்பு-8
★ டி. டபிளியூ. திலகா திஸாநாயக்க. 9, சம்பத் ஸ்டோர்ஸ், புதியநகர், ஹெட்டிப்பொல [வில்கமுவ
★ சியன் பார்த்தலோமியுஸ், 13 ஏ. டெம்பிளர் பிளேஸ், கல்கிசை
★ பேபி நாலக வீரசிங்க. 5. சென், அன்ரனி வீதி. சனுவன, ஜாஎல
★ அஞ்ஜலி டி. ஏ. டி. சில்வா, 20 காஸில வீதி. கொழும்பு-8
★ எம். வீரசேகர, இல 57. தேவாலய வீதி, பாலொட நுகேகொடை
★ என். பேர்ணி டயஸ், 4பி/9-2, மத்தேகொட வீடமைப்புத் திட்டம் பொல்கஸ்ஸோவிட்ட
★ சியாமளா பேரேரா. 13 1/1, சார்ள்ஸ் அவெனியூ கொழும்பு-3
★ தரிஷ் ஜபஸீன், 58. சுவர்ண வீதி, கொழும்பு-6
★ ஐராங்கனி மல்லிகா, 26/1, சுஜாதா மாவத்தை களுபோவில, தெஹிவளை
★ ஜே. பி. ஆர். கிறிஸ்தொஸ். 14, 33ஆம் ஒழுங்கை. வெள்ளவத்தை
★ உதார ஏ. வீரசேகர. 62, தர்மதாசா மாவத்தை, எல்பிற்றவல, ரா்கம
★ சுபர்ஷு ரெுட்ரிகோ, 66/1 ஏ. செ. பீட்டர்ஸ் வீதி, மொறட்டுவை
★ பஸ்லியா காஸிம் 194. காலி வீதி, கல்கிசை
★ ஏ. ஜே. எச். எம் றஸீம். 205 கல்பொக்க வீதி வெலிகம
★ பி. கல்பகே, 129/6. நாவலை வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு-5
★ டி. கே. குணசேகர, 42, "கொஸம்பி" குடாபத்கமுவ, அங்கொட
★ எம். செந்தூரன், 57/32, முத்துவெல மாவத்தை. கொழும்பு-15
★ ஸான் சமர பெரேரா, 4ஏ, கௌதான வீதி. தெஹிவளை
★ கவிரத வீரக்கோன், 1/3 அன்டேர்ஸன் தொடர்மாடி, கொழும்பு-5
★ அவ்றில் பெரேரா. 100/41, மாளிகாவத்தை வீதி கொழும்பு-10
★ டி. சருணரத்ன, 62/10 பழைய கொட்டாவ வீதி, மீரிஹான. நுகேகொட
★ அனோஜா வீரக்கொடி. 14, கௌதான அத்திடிய வீதி, தெஹிவளை
★ ஷீலா அபேரத்ன, 65, உஸ்வத்தை சுற்றுவீதி, மொறட்டுவை
★ நிர்மலி பொணண்டோ, 23, சிரிபுர வீடமைப்புத் திட்டம், தலவத்துகொட
★ ஷன்லால் டி சில்வா, 43/1, அத்திடிய வீதி, இரத்மிலானை
★ எஸ் ஜே ஏ ஏ. பீரிஸ், 183, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
★ ஏ எச். எம். பாரூக் 120/20, எம். சி. வீதி, மாத்தளை.
★ மாரீஸ் ஜயசூரிய, 63/1, மெயின் வீதி. மொறட்டுவை.
★ ஜொஹான் டெனிஸ் ஹரிஸ், 18, பெர்ணண்டோ கார்டின்ஸ், தெஹிவளை.
★ ஆர் எஸ். என். கருணரத்ன, 69, கிறகரி வீதி, கொழும்பு-7.
★ நிஷா உறத்திராமணி, 423, காலி வீதி, கொழும்பு-4.
★ நிருபா சுபசிஙக, 6, பிரிவெண மாவத்தை, கலகிசை.
★ ரஸீன ஸராணி, 25, 37ஆம் ஒழுங்கை, கொழும்பு-6
★ சி. எம். விஜேசிங்க, 247/3, மரியா மாவத்தை. கிரிபத்கொடை, களனி.
★ எம். என். ஏ பைசால், 97, தெஹிவளை வீதி, பொரளஸ்கமுவ,
★ சத்துரி சேனநாயக்க, 673, ஹைலெவல் வீதி, நுகேகொடை.
★ ஹரிந்திர கருணரத்ன, 214, காலி வீதி, பாணந்துறை.
★ சர்மிளா பெரேரா, 142/17, பொல்ஹேன் கொடை வீதி, கொழும்பு-5
★ குகம் அத்துகோரள, 7, சென் பேரி ஒழுங்கை. மட்டக்குளி, கொழும்பு-15.
★ என். எஸ். டயஸ். 88, "சிசிர", கொட்டிகாவத்தை, அங்கொடை.
★ இனோக்கா ரணசிங்க, 17 ஏ, விக்கிரமரத்ன அவெனியூ. கொஹுவலை. நுகேகொடை.
★ பி. பி. வித்தாச்சி, 11/1, பெலவத்தை வீதி, நுகேகொடை.
★ அனோமா வீரசிங்க, மே/பா. எம் பி. பெரேரா, 13 1/1. சார்ஸ் எவனெயூ, கொழும்பு-3
★ ஷலிந்திர சொய்ஸா, 19, பெதெஸ்டா பிளேஸ், கொழும்பு-5.
★ ஜாஹறான் ரத்னம், 20 1/1, சாகர வீதி, கொழும்பு 14.
★ கிஹான் டி சொய்ஸா, 444/9, காலி வீதி, இரத்மலானை.
★ பிரஷான் தனையசிங்கம், 70/1, பீட்டர்ஸன் ஒழுங்கை, கொழும்பு-6
★ அவந்தி திஸாநாயக்க, 4, வெலிக்கடவத்தை, ராஜகிரிய.
★ வ. போவன்கே, 199/4, ராஜகிரிய வீதி, ராஜகிரிய.
★ சிஸிர சுஜித் விக்கிரமசிங்க, 103, ரத்னகம வீதி, பெல்மதுல்ல.
★ ஜே. கிறே, 26 ஏ. கிருலப்பனை அவெனியு, கொழும்பு-5.
★ ஆர். எஸ். பலவர்த்தன 65/2, டெம்பிள் வீதி, மஹரகம.
★ கரீன மார்லி 66/1, ஜம்புகஸ்முல்ல வீதி, நுகேகொடை.
★ காஞ்சன குணவர்த்தன, 522/6, எவ்வித்திகல மாவத்தை, கொழும்பு-15.
★ ரெுஸானி கொல்மெய. 93, மேபில்ட் வீதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு.13.

Nestum உங்கள் நாளை ஆரம்பிக்க ஆரோக்கியமான வழி!

---

பாடுறும் மக்களின் பாவம்போக்க
பாரம் நிறைந்தவரின் பாரம் சுமக்க!...

## 'அன்பரின் அழைப்பு'

— நற்செய்தி நிகழ்ச்சி —

அறநெறிப் பேச்சாளர்

**"சாமுவேல் கணேஷ்"**

வழங்கும்

அரிய நற்செய்தி

இடம்:
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபம்.

காலம்:
ஒக்டோபர் 4ஆம் (செவ்வாய்), 5ஆம் (புதன்) திகதிகளில் மாலை 3.30 மணிக்கு.

கிறிஸ்துவுக்காக
இளைஞரின் படைப்பு

அனுமதி இலவசம்

(6861)

---

## வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள்

வெளிநாட்டு வேலை வாய்ப்புகளைப் பெற நாட வேண்டிய இடம்

**FORTUNA ENTERPRISES**
(Labour License No. 79)

பாரின், குவைத், சவூதி,
யூ. ஏ. ஈ, சிங்கப்பூர்
வேலை வாய்ப்புகள்

(1) லேபரேர்ஸ் — 50
(2) டிறைவேர்ஸ் — 05
(3) ஹெவி வெயிக்கிள் டிறைவேர்ஸ் (H V.Drivers) — 07
(4) வீட்டுப் பணிப்பெண்கள்
(5) மேசன்
(6) காப்பென்டேர்ஸ்
(7) எலெக்ரிஸன்
(8) மெக்கானிக் (Diesel & Petrol)
(9) தோட்ட வேலையாட்கள் (Gardeners))
(10) பெண் தையற்காரர் (Female Tailors)

நீங்கள் நாடவேண்டிய முகவரி:

**போடியூனு என்ரபிரைசஸ்**

யாழ்ப்பாணப் பிரதிநிதி:
இ. விஸ்வேஸ்வருயன்
3ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(6877)

---


## நிவாரணம் காசோலையாக

ஒட்டுசுட்டான், அக் 3 முல்லைத்தீவு மாவட்டத்தில் அகதிநிவாரணத்திற்கு பொருள்களாக வழங்கப்படுவதற்கு பதிலாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் காசோலை மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-113)

---


# டியூரோல்®

டியூரோலில் அடங்கியுள்ள இரும்புச் சத்து, உடலில் இரத்த விருத்தியை உண்டுபண்ணி இரத்த சோகை நோயின் அறிகுறிகளான சோர்வு, பலவீனம், மந்தம் என்பனவற்றை இல்லாமற் செய்து ஆரோக்கியமான வாழ்விற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது.




Grant BJK&E PFL 1157

'செறி' சுவை கொண்ட, வளர்ந்தோருக்கான டியூரோல்®

ஆப்பிள் சுவை கொண்ட பிள்ளைகளுக்கான டியூரோல்®

**தினமும் டியூரோல்® அருந்துங்கள். அது சுறுசுறுப்பானவர்களின் பானம்.**

சில்லறை விலை ரூ. 37/50 200 மி. லீ.

Pfizer

சில்லறை விலை ரூ. 39/90 200 மி. லீ.

® ஃபைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.


---

## கிளிநொச்சி கச்சேரி
# கேள்விகள் கோரும் அறிவித்சல்

கிளிநொச்சி கச்சேரி, திணைக்கள கேள்விச் சபைத் தலைவரால் கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டட திருத்த வேலைகட்கான கேள்விகள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 1988ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து தேவைப்படும் பதிவுத் தொகை, மீளப் பெறக்கூடிய வைப்புப் பணம், மீளப் பெறமுடியாத கொடுப்பனவு ஆகியன பின்வரும் அட்டவணையில் தனித்தனியே ஒவ்வொரு வேலைக்குமெதிராகக் காட்டப்பட்டுள்ளன.

| இலக்கம் | வேலை விபரம் | தேவைப்படும் பதிவுத் தொகை | மீளப் பெறக் கூடிய வைப்புப் பணம் | மீளப்பெறமுடியாத கொடுப்பனவு |
|---|---|---|---|---|
| (1) | பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையின் திருத்த வேலைகள் | 50,000/- | 100/- | 50/- |
| (2) | பூநகரி உதவி அரசாங்க அதிபர் விடுதியில் திருத்த வேலைகள் | 75,000/- | 100/- | 50/- |
| (3) | பளை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் திருத்த வேலைகள் | 75,000/- | 100/- | 50/- |
| (4) | கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் திருத்தவேலைகளும் நிறம் பூசுதலும் | 50,000/- | 100/- | 50/- |
| (5) | திட்டமிடல் பணிமனைக்கு சமுவும் பேசின் (Wash Basin) முகம்பார்க்கும் கண்ணடி, பைப்புகள் பொருத்துதல் | 75,000/- | 100/- | 50/- |
| (6) | உதவி அரசாங்க அதிபரின் (த பி.) விடுதியைப் புதுப்பித்தலும், திருத்த வேலைகளும் | 50,000/- | 100/- | 50/- |
| (7) | கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் விடுதியைப் புதுப்பித்தலும். திருத்த வேலைகளும் | 50 000/- | 100/- | 50/- |
| (3) | அரசாங்க அதிபர் வாசஸ் தலத்துக்கு சுற்றுமதில் கட்டுதல் | 250,000/- | 200/- | 100/- |
| (9) | பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனை விடுதிகள் திருத்த வேலைகள் | 50,000/- | 100/- | 50/- |

ஒவ்வொரு வேலைக்குரிய கேள்விப்பத்திரப் படிவங்களும் அவ்வவ் வேலைக்குரிய மீளப் பெறக்கூடியதும், மீளப்பெறமுடியாததுமான தொகைகளைச் செலுத்தி 14.10.1988 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

க. தேவசிகாமணி,
தலைவர்
திணைக்களக் கேள்விச்சபை
கிளிநொச்சி கச்சேரி.
மாவட்டச் செயலாளரும்
அரசாங்க அதிபரும்
கிளிநொச்சி மாவட்டம்.

கச்சேரி கிளிநொச்சி.
1988. 09. 29.

(C/96)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவுக்கு நிவாரணம் இல்லையா?

நெடுந்தீவு, அக் 3

சமீபத்திய வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்தவர்களுக்கு ரூபா இரண்டாயிரம் நிவாரணம் வழங்குவதற்கான ஆயத்த வேலைகள் யாழ் குடாநாட்டின் பல்வேறு உதவி அரசாங்க அதிபர் பகுதிகளிலும் இடம் பெறத் தொடங்கியுள்ளன.

எனினும் நெடுந்தீவு மக்களுக்கு இந்த நிவாரண உதவிகள் இல்லை என்பதும் நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் இது குறித்து யாழ். அரச அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ 111)

### வயாவிளான் - பலாலி பகுதிகளில்

# கைவிடப்பட்ட நிலங்களில் மீண்டும் பயிர்ச்செய்கை

பலாலி, அக் 3

வயாவிளான் — பலாலிப் பகுதிகளில் இதுவரை கைவிடப்பட்டிருந்த விவசாய நிலங்கள் திருத்தியமைக்கப்பட்டு மீண்டும் விவசாய நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தத் தொடங்கப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து வயாவிளானின் தென்பகுதியூடாக புன்னாலைக்கட்டுவன் பகுதிவரைக்கும்—குரும்பசிட்டிப் பகுதிகள் உட்பட மயிலிட்டி தெற்குப் பகுதிகள், வயாவிளானின் வடபகுதியூடாக பலாலிவரைக்கும் உள்ள முழு விவசாய நிலங்களும் செய்கை பண்ணப்படாதிருந்தன.

இப்பகுதி விவசாய நிலங்கள் நீண்டகாலம் செய்கை பண்ணாமையால் பற்றைகள் வளர்ந்து- இராணுவ வாகனங்களால் சீர் குலைக்கப்பட்டும் இருந்ததனால் தற்போது அவற்றின் பற்றைகள் அழிக்கப்பட்டும்- நிலங்கள் பண்படுத்தப்பட்டுப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுத்தப்பட வேண்டியதனால் பயிர்ச் செய்கை மந்தகதியிலேயே நடைபெறுகின்றது.

வெங்காயம், மிளகாய் பரக்கறி வகைகளின் விலையில் ஏற்றம் கண்டிருப்பதன் காரணமாக மேற்படி நிலங்கள் விரைவாகப் பயிர்ச் செய்கைக்குள்ளாக்கப்பட்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது. (ஒ-119)


"நோய்க்கொரு பகைவன்" பெற்றிடுவோம்

- Warner Lambert Lanka Ltd.
- Hemas (Drugs) Ltd.
- Mack Woods Ltd.
- Farnell Cey. Ltd.
- Lanka Medical (Import) Ltd.

இக்கம்பனிகளின் அதிகாரம் பெற்ற வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:

நியூபார்மேட் டிஸ்ரிபியூடர்ஸ்

இல. 128, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

மேலும் எம்மிடம் மொத்த விலையில் பெற்றா பார்மசி, சோஜிகல் பொருள்களும் விற்பனைக்கு உண்டு

(C/352)



"M" THREE TRAVEL

பெருமையுடன் வழங்கும் உடனடி

வேலை வாய்ப்புக்கள்

சவுதி அரேபியாவிற்கு கடவுட் சீட்டு தந்தவர்கள் சென்ற வாரம் பிரயாணம் செய்துவிட்டார்கள். இன்னும் பலர் எதிர்வரும் 5-10-88லும், 13-10-88இலும் பிரயாணம் செய்ய இருக்கிறார்கள்.

நீங்களும் இந்த சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள் கீழ்க்காணும் வெறறிடங்கள் தற்போது எம்மிடம் உண்டு. உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்யப்படும்

1, சவுதீ அரேபியா

ஆஸ்பத்திரி கிளினோர்ஸ்:-
(Hospital Cleaners) 21 வயதிற்கு மேற்பட்டவர்கள்
ஒட்டுனர் (Welding)
மின்சாரம் (Electrical)
தண்ணீர்பைப் (Plumber)
ஏதாவது ஒன்றில் சிறிதளவு அனுபவம் தேவை
நல்ல சம்பளம் 500 (றியால்ஸ்)

2. மின்சார அனுபவத்துடன் தண்ணீர் பம்ப் மெக்கானிக் (Water pump mechanic) Open visa 25 வயதிற்கு மேற்பட்டவர்கள் சம்பளம் 600 , 150 றியால்
3. Harbour Cleaners: துறைமுக கிளினோர்ஸ்
4. Airport Cleaners: விமானத்தள கிளினோர்ஸ்
5. Maintenance Cleaners: பராமரிப்பு கிளினோர்ஸ்

நம்பிக்கை நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

"M" THREE TRAVEL

திரு செல்லையா அரசரெட்ணம் (Passp rt No. HO 106872) Church Lane Thavady, Kokuvil. உடனடியாக எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

✶ புதிதாக கடவுச்சீட்டு செய்ய விரும்புவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்

✶✶ எங்களிடம் புதுக் கடவுச்சிட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்

✶✶✶ பொன்ட் (Bond) செய்து கொடுக்கப்படும் இவை எல்லாவற்றிற்கும்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

த. இந்திரநாதன்
சோதி லேன்
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

த. இந்திரநாதன்
No. 1, 2ம ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C.345)


## தமிழ்மொழி: விடைகள்

1. 10. 1988 ஆம் திகதிய 'சஞ்சீவி'யில் வெளியான க. பொ. த. சாதாரண தரம் (புதிய பாடத் திட்டம்) 1988 மாதிரி வினாத்தாள் பகுதி I இன் விடைகள் வருமாறு;

| வினா இல: | விடை |
|---|---|
| 1— | குறிஞ்சி |
| 2— | பயனற்றவர் |
| 3— | சிலப்பதிகாரம் |
| 4— | பிரமா |
| 5— | வீரமாமுனிவர் |
| 6— | தேற்றம் |
| 7— | உயர்வு, சிறப்பு |
| 8— | திடீரென |
| 9— | நள் |
| 10— | வாரானை |
| 11— | கீழ் |
| 12— | செவிலி |
| 13— | அணை |
| 14— | விமர்சனம் |
| 15— | சிலேடை |
| 16— | அணிந்துரை |
| 17— | பாகன் |
| 18— | அறிவு முதலியவற்றை ஆராய்தல் |
| 19— | உருத்திராட்சப் பூனை |
| 20— | அலை மோதும் போதே தலை முழுகு |

### கிரனேட் தாக்குதல்

## அஜித உட்பட ஐவர்மீது வழக்கு

கொழும்பு, அக் 3

கடந்த ஆண்டு ஆகஸ்ட் 18 இல் நடைபெற்ற நாடாளுமன்ற கிரனேட் தாக்குதல் தொடர்பாக அஜித்குமார மற்றும் நான்கு பேர் மீது இன்னும் இரண்டு வாரங்களில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று தெரிகிறது.

இச் சம்பவம் பற்றிய விசாரணை கடந்த ஓராண்டு காலமாக நடைபெற்று வந்தது. 15 ஆயிரம் பக்கங்கள் கொண்ட தஸ்தாவேஜு தயாரிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## தமிழுக்கு இடமில்லை

கொழும்பு, அக் 3

மேற்கு மாகாண சபையின் கூட்ட நிகழ்ச்சிகள் பெரும்பாலும் சிங்களத்திலேயே இடம்பெறுகின்றன.

இடையிடையே ஆங்கில மொழி பயன்படுத்தப்படுகின்ற போதிலும் தமிழ் மொழிபெயர்ப்பு வசதிகள் செய்யப்படவே இல்லை எனவும்- ... தமிழில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-க)

## சனசமூக நிலையங்கள் நன்கொடைப் பணம் இன்றி அவதி

### உள்ளூராட்சி ஆணையாளருக்கு மகஜர்

யாழ். மாவட்டத்தில் உள்ள பெருந் தொகையான பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்குக் கடந்த வருடத்துக்கான அரசாங்க நன்கொடைப் பணங்கள் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

இதனால் சனசமூக நிலையங்கள் தத்தம் வருடாந்த வேலைகளைத் திருப்திகரமாகச் செய்து முடிக்க முடியாது திண்டாடுகின்றன.

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் திரு. சி. சி. வரதராசா கொழும்பு உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பியுள்ள மகஜரொன்றில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## ஒப்பந்தத்துக்கு முரணாக அரசு செயற்பட்டு வருகிறது

### சிறிமாவோ குற்றச்சாட்டு

கொழும்பு, அக் 3

அமைதி ஒப்பந்தத்துக்கு முரணாக இலங்கை அரசு செயற்படுவதாகச் சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோபண்டாரநாயக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

கடவத்தையில்நடந்த கூட்டம் ஒன்றில் பேசுகையில் திருமதி பண்டாரநாயக்கா இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் சொன்னதாவது:-

போராளிகள் ஆயுதங்களை ஒப்படைத்த பின்னர் தான் வடக்குக்-கிழக்கு இணைப்புப் பிரகடனம் என்று ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது.

இப்போது அந்தநோக்

(7 ஆம் பக்கம் பார்க்கா)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் யோகநாதன் வாகீசன்

தோற்றம்; 1983 - 05 - 11 — மறைவு: 1987 - 10 - 14

வட்டக் கருவிழியும்
வான்முகில் மயிரழகும்
பட்டுக் கன்னமதில்
புதுவழகுப் புன்னகையும்
எட்டிக் கலைபயின்ற
சுட்டிச் செல்வமடா!
சிட்டுக் குருவியடா சிந்தை குளிருதடா!
கட்டித் தங்கமடா உன் பட்டுத்
தளிர் மேனியிலே
தொட்டனனே- அக் கொடுங் கூற்றுவன்

உங்கள் ஆத்மா சாந்தியடைய நாங்கள் தினமும் இடைவிடாதுமன்றாடுகின்றோம்.

உன் பிரிவால் வாடும்:
அப்பா, பேரன்மார், பேத்திமார், மாமாமார் மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், பெரியம்மாமார், பெரியப்பாமார், அண்ணன்மார், மச்சாள்மார், தம்பிமார், தங்கைமார், மற்றும் உற்றார், உறவினர்.

'சோம வாசா'
ஊரெழு கிழக்கு.
சுன்னாகம். (6853)

## கண்ணீர் அஞ்சலி



### பசுபதிப்பிள்ளை சாட்சாதீஸ்வரன் (பபா)

பசுபதிப்பிள்ளை சாட்சாதீஸ்வரன் (பபா) அவர்கள் (முன்னாள் கொழும்பு கொமஷல் கொம்பனி பொறியியலாளர், பொறியியலாளர் நைஜீரியா), 25 - 9 - 88 நைஜீரியாவில் காலமாகிவிட்டார் என்பதை மிகவும் துக்கத்துடன் தெரிவிக்கின்றோம்.

இவர் இளைப்பாறிய லிகிதர் S. பசுபதிப்பிள்ளை, மரகதம்பாள் (ஜெயந்திநகர், கிளிநொச்சி-மதுரை) தம்பதிகளின் இரண்டாவது மகனும், செல்வதேவியின் (ஆசிரியை நைஜீரியா-முன்னாள் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்) அன்புக் கணவரும், சாயினியின் அன்புத் தந்தையும் சிவபாதீஸ்வரன் (லண்டன்) சடாச்சரம்-(அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், செல்வநாயகம், அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், துரைராஜா (ஜெர்மனி) திருமதி ஜெபதேவி லோகநாதன், பத்மஜெயம் (ராசா), பத்மதேவி (இந்தியா) சுந்தரராஜன் (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 28-9-88 (புதன்கிழமை) நைஜீரியாவில் நடைபெற்றுள்ளதென்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
ம. வி. செல்வநாயகம்
பழைய தபாற்கந்தோர வீதி,
சங்கானை. (6888)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

"சீரெலாம் பெற்றுச் சிறப்புற மகிழ்ந்து
ஊரெல்லாம் போற்ற உவப்புடன் வழ்ந்து
சிவன்றன் திருத்தாள் சென்றனர் இனிதே"



(மனைவி)

**திருமதி கமலாதேவி ஆனந்தராஜா**

ஆண்டவன் அன்பளிப்பு: 02 - 06 - 1946 — அநியாய அழிப்பு: 15 - 10 - 1987



(மகள்)

**செல்வி அனுஷியா ஆனந்தராஜா**

ஆண்டவன் அன்பளிப்பு: 14 - 10 - 1973 — அநியாய அழிப்பு: 15 - 10 - 1987

திதி: 03 - 10 - 1988

கட்கிலியாள் காதலன் காதல் வனகபுனைவாளுட்குடையா ளூர் நாணிபல் பிணுளுட்கி யிடனறிந் தூடி யினிது னுணரு மடமொழி மாதராள் பெண்.

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை யிடம் வீழ்ந்த துண்ணு திறக்கும்-இடமுடைய வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர் மான மழுங்க வரின்

கணவன்: திரு. அ. ஆனந்தராஜா,
மகள்மார்: செல்வி ஆ. சாருலதா, செல்வி ஆ. நிரோஷிகா
தாயார்: திருமதி பா. தங்கமுத்து.

'இராஜ வாசா'
கோப்பாய் தெற்கு,
கோப்பாய். (7116)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.

**பொருள்:**

பகைவரை எதிர்க்கும் வீரத்தை மிக்க ஆண்மை என்று கூறுவர்; ஒரு துன்பம் வந்த போது பகைவர்க்கும் உதவி செய்தலே அந்த ஆண்மையின் கூர்மை என்று கூறுவர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி. தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 23073
03-10 1988 உ பெ இல 23


## மாறி வந்தது ஏனோ?

வடபகுதியில் தாதிகள் பதவிக்கு 400 வெற்றிடங்கள் இருந்தும், 185 விண்ணப்பங்களே கிடைத்துள்ளன!

இப்படி ஒரு செய்தியைப் பத்திரிகையில் படித்ததும், எல்லோருக்குமே பெரும் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கும்!!

வேலையில்லாப் பிரச்சினை பெருமளவில் தலைதூக்கி உள்ள காலம் இது. ஜி சி ஈ. சாதாரண தரம் என்றும், உயர்தரம் என்றும் படித்துத் தேறிவிட்டு வேலை தேடிக்கொண்டிருக்கும் இளவயதினர் எண்ணிக்கை ஏராளம். பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெறுவதற்கு ஒரு சில புள்ளிகள் குறைந்ததால் உயர்படிப்பு வசதி பெறமுடியவில்லையே; ஒரு தொழில் தேடுவதே அடுத்த வழி என்று இருக்கும் இளைஞர் யுவதிகளும் ஆயிரக்கணக்கினர்.

இப்படி ஒரு சூழ்நிலையில், எமது கல்வித் திட்டம் தொழில் சார்ந்ததாக இல்லாத குறைபாடு காரணமாக, ஒரு வெற்றிடத்துக்கு நூறு பேர் விண்ணப்பிக்கும் நிலையைக் காண்கிறோம். பியோன் பதவி தொடக்கம் முகாமையாளர் போன்ற உயர் பதவிகள் வரை விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை, வெற்றிடங்களை விடப் பல மடங்காக இருப்பதே வழக்கம்.

ஆனால் தாதிகள் பதவிக்கு மட்டும் நிலைமை அடுத்த பக்கமாக இருப்பது பெரும் ஆச்சரியத்தைத் தருவதும், வியப்புக்கு உரியதுமாக உள்ளது. அதுவும் வடபகுதியில் இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பது கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஒவ்வொரு விடயத்திலும் கொழும்பு அரசு, தமிழர்களுக்குப் பாகுபாடு, பாரபட்சம், புறக்கணிப்பு என்ற மும்மந்திரத்தை ஓதிச் செயற்படும் வேளையில், 400 பதவிகளுக்கு விண்ணப்பித்த 185 பேருக்கும் நியமனம் கிடைப்பதாக வைத்துக் கொண்டாலுங்கூட, மிகுதி 215 பதவிகளையும் தென்பகுதிக்கு மாற்றி ஒதுக்கிவிட்டாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஆனால் இங்கு தமிழ்ப் பகுதி ஆஸ்பத்திரிகளிலோ, பணியாள் தொடக்கம் டாக்டர்கள் வரைக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. தாதிகள் வெற்றிடங்களை நிரப்புவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரிவரப் பயன்படுத்தவில்லை என்றால் கைக்கு எட்டியும் வாய்க்கு எட்டாத நிலையாகவே முடியும். தேடிவந்த செல்வத்தைக் காலால் தட்டிவிட்ட கதையாகிவிடும்.

ஜி.சி.ஈ. சாதாரண பரீட்சையில் 4 திறமைச் சித்திகள் (குறிப்பிட்ட பாடங்களில்) உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும் என்பதே தாதிகள் பதவிக்கு விண்ணப்பதாரரிடம் எதிர்பார்க்கப்பட்ட கல்வித் தகைமையாகும். வயது எல்லை 18 முதல் 30 வரை ஆகும்.

அப்படியிருந்தும் 185 பேர் தான் கிளிநொச்சி உட்பட 11 தொகுதிகளில் இருந்து விண்ணப்பித்திருக்கிறார்கள்! குறிப்பிட்ட கல்வித் தகைமையுடன் வேலையில்லாதிருப்போர் வடபகுதியில் குறைவு என்று சொல்ல முடியுமா?

தாதிகள் பதவி மகத்துவம் இல்லாதது என்று பலரும் விண்ணப்பிக்காமல் விட்டார்களோ என்ற சந்தேகமே மேலோங்கி எழுகிறது.

வேறு எந்தத் தொழிலையும் விட அது மகத்துவம் மிக்கத் தொழில் என்பதை பலரும் புரிந்து கொள்ளாமையே அதற்குக் காரணம் எனலாம். நோயாளி ஒருவருக்குச் சேவை செய்வது தெய்வத்துக்குப் பூஜை செய்வதை விடச் சிறப்பானது. மக்கள் தொண்டே இறைதொண்டு என்று சமயப் பெரியார்கள் எல்லோரும் கூறியிருக்கிறார்கள். அதிலும் உயிருக்காகப் போராடும் ஒரு நோயாளிக்குச் செய்யும் தொண்டு மிக மிக மகத்தானது.

இந்த உண்மையை எமது இளைஞர், யுவதிகள் உணர வேண்டும். மேலும், செய்யும் தொழில் தான் தெய்வம் என்பதையும் மறந்து விடலாகாது எந்தத் தொழிலையும் செய்யும் மனப்பக்குவம் மனிதனுக்கு வேண்டும். விசேடமாக மாணவருக்கு வேண்டும்

தொழில் மகத்துவம் பற்றிப் பாடசாலைகளில் சரிவரப் புகட்டப்பட்டிருந்தால் 400 தாதிகள் பதவிக்கு 185 பேர் மட்டும் விண்ணப்பித்திருக்கமாட்டார்கள்!

2 தினங்களில் 200 பேர் பலி:

# ஹைதராபாத், கராச்சி படுகொலைக்குப் பின்னணியில் அதிபர் ஸியாவைக்கொன்ற சக்திகள் உள்ளன!

## பாகிஸ்தான் இராணுவத் தளபதி குற்றச்சாட்டு

இஸ்லாமபாத், அக் 2

ஹைதராபாத், கராச்சி படுகொலைகள் நாட்டைப் பலவீனப்படுத்த வெளிச்சக்திகளின் துணையுடன் நடத்தப்பட்டன என்று பாகிஸ்தான் இராணுவத் தளபதி அஸ்லம் பெக் குற்றஞ்சாட்டினர்.

கடந்த வெள்ளிக்கிழமை ஹைதராபாத்தில இடம்பெற்ற படுகொலையில் 160 பேர் உயிரிழந்தனர்.

பழிவாங்கலாக கராச்சியில் மறுநாள் நடந்த வன்முறையில 50 பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

இச் சம்பவங்களைத் தொடர்ந்து, இராணுவத் தளபதி அஸ்லம் பெக் தனது அதிகாரிகள் மத்தியில் உரையாற்றினர்.

அப்போதே அவர், வெளிநாட்டுச் சக்திகள் பாகிஸ்தானைப் பலவீனப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

அதிபர் ஸியா-உல்-ஹக் கொலைக்குப் பின்னணியில் இருந்த சக்திகளே இப்படுகொலைக்கும் பின்னணியில் இருப்பதாக தளபதி அஸ்லம் பெக் தெரிவித்தார்.

நவம்பர் தேர்தல் திட்டமிட்டபடி நடத்தப்படும். தேர்தலைக் குழப்ப செய்யும் எந்த நடவடிக்கையும் முறியடிக்கப்படும். தேர்தலின் போது பாரபட்சமின்றி இராணுவம் தனது கடமையில் ஈடுபடும்- இப்படி தளபதி அஸ்லம் பெக் மேலும் சொன்னர். (எ)

### பாரதியார் பற்றிய ஆராய்ச்சி நூலுக்குப் பரிசு

பாண்டிச்சேரி, அக் 2

பாரதியார் பற்றிய ஆராய்ச்சி நூலை எழுதுபவருக்கு இந்திய பணத்தில் பத்தாயிரம் ரூபா பரிசு வழங்கப்படும் என்று பாண்டிச்சேரி பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் வேங்கடசுப்பிரமணியம் அறிவித்திருக்கிறார்.

பாண்டிச்சேரியில் நடந்த பாரதியார் நினைவு விழாவில் தலைமையுரை நிகழ்த்திப் பேசிய போது இதனை அவர் தெரிவித்தார்.

''புதுவையில் பாரதி', என்ற தலைப்பில் 6 மாதங்களுள் தமிழில் ஒரு ஆராய்ச்சி நூலை யார் வேண்டுமானாலும் எழுதி அனுப்பி வைக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (இ எ-4)

ஆப்கனிஸ்தானில்

## காபூல் மற்றும் நகரங்கள் மீது தொடரும் கெரில்லாக்களின் ரொக்கட் தாக்குதல்!

காபூல், அக். 2

ஆப்கானிஸ்தானில் ஜலலபாத் நகர் மீது கிளர்ச்சிக்காரர்கள் நடத்திய ஏவுகணைத்தாக்குதலில் 17பேர் கொல்லப்பட்டனர்

உயிரிழந்தவர்களில் பெண்களும் குழந்தைகளும் அடங்குவர் என்று காபூல் அரசு அறிவித்தது

தரையில் இருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணைகள் எட்டு இத்தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டன என்றும் காபூல் அரசு அறிவித்தது.

ஏற்கனவே தலைநகர் காபூல் மீது சில தினங்களுக்கு முன்னர் கிளர்ச்சிக்காரர்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் 50பேர் வரை கொல்லப்பட்டனர்

இதனிடையில் மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகள் மீது ரொக்கட் தாக்குதலை மேற்கொள்ள வேண்டாம் என்று தனது வீரர்களைப் பணித்திருப்பதாக பிரதான கெரில்லா இயக்கத்தின் தலைவர் குல்புதீன் ஹெக்மத்யார் அறிவித்திருக்கிறார்.

தலைநகர் காபூலைச் சுற்றியுள்ள அரச இராணுவக் கேந்திரநிலையங்கள் மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்தும்படி தனது வீரர்களுக்கு உத்தரவிட்டு உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை— ஆப்கன் வெளியுறவு அமைச்சர் அப்துல் வாக்கில். மாஸ்கோவில் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெர்வானட்சேயைச் சந்தித்து அவசரப் பேச்சுக்கள் நடத்தினர், (எ)

### பிரணப் முகர்ஜி மீண்டும் இ. காங்கிரஸில

புதுடில்லி, அக் 2

முன்னைள் நிதி அமைச்சர் பிரணப் முகர்ஜி மீண்டும் இந்திரா காங்கிரஸில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்

கட்சித் தலைவர் என்ற முறையில் பிரதமர் ராஜீவ் காந்தி இதற்கு அங்கீகாரமளித்தார்.

அன்னை இந்திரா காந்தி கொல்லப்பட்ட சமயம் திரு. முகர்ஜி நிதி அமைச்சராக அமைச்சரவையில் இரண்டாவது இடத்தில் இருந்தார்.

பிரதமர் பதவிக்கு திரு ராஜீவ் காந்தி தெரிவானதைத தொடர்ந்து திரு. முகர்ஜி கட்சிக்குள் எதிரபபணியில் இருந்தார். அதைத் தொடர்ந்து அவர் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். (எ)

## ஜனதிபதி கோர்பச்சேவுக்கு உலக நாடுகள் பாராட்டு

மாஸ்கோ, அக் 2

சோவியத் யூனியனின் ஜனதிபதியாகப் பதவி ஏற்ற திரு மிக்கெய்ல் கோர்பச்சேவ் உலக நாடுகளினல் பாராட்டப்பட்டார்.

அரசியல் சீர்திருத்தக் கொள்கையை அமுல் நடத்துவதில் திரு.கோர்பச்சேவ் உறுதியாக நிற்பார் என்று கம்யூனிஸ்ட் நாடுகள் அங்கம் வகிக்கும் வார்ஸோ அமைப்பு பாராட்டி உள்ளது

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ஜனதிபதி இரா.வெங்கட்ராமன் ஆகியோரும் திரு கோர்பச்சேவை வாழ்த்திச் செய்திகள் அனுபினர். (எ)

## மார்க்கோனியின் மனைவி பி. பி. சிக்குப் பாராட்டு

லண்டன், அக்டோபர் 2

வானொலியைக் கண்டு பிடித்த குலியானே மார்கோனியின் விதவை மனைவி நேற்று லண்டனில் பி பி. சி யின் உள்ளூர் சேவைகளின் வருடாந்த விழாவில் கலந்து கொண்டார்

பி பி சி. வானொலிச் சேவையை அவர் பெரிதும் பாராட்டினர்.

பி. பி சி வானொலிச் சேவையை உலகமே வியந்து பாராட்டுவதாகவும் திருமதி மார்கோனி தெரிவித்தார். (எ)

### 4 கோடி டாலர் நட்டம்

ஆர்மேனியா மாநிலத்தி இதுவரை நடந்த வேலை நிறுத்தம் காரணமாக சோவியத யூனியன அரசுக்கு 4 கோடிடாலர் நட்டம ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் கடந்த பத்து நாட்களாக ஆர்மேனியாவில் நடந்து வந்த வேலை நிறுத்தம் முடிவடைந்து விட்டது என்று தெரிவிக்கப்பட்டது (எ)

**வெளி உலகில்**

### ஸ்ரேபி கிராவ் சாம்பியன்

சோல், அக் 2

ஒலிம்பிக் போட்டியின் டென்னிஸ் பெண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் மேற்கு ஜேர்மனி வீராங்கனை ஸ்ரெபி கிராவ் தங்கப்பதக்கத்தை வென்றார். (ஒ-க)

பாதிக்கப்பட்ட

# வடக்கு, கிழக்குப் பகுதி மக்கள் வங்கிக்கடன் பெறமுடியாத நிலை

## காணிப்பதிவகம் இயங்காததால்சிக்கல்

யாழ்ப்பாணம், அக். 3

வடக்கு, கிழக்குப்பகுதிகளில் காணிப்பதிவாளர் திணைக்களம் இயங்காத காரணத்தால் இப்பகுதியில்பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் அரசவங்கி, மற்றும் நிதிநிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெறமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

தமிழ்ப் பகுதிகளைச் சேர்நத பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச வங்கிகளின் ஊடாக கடனுதவிகளை வழங்க அரசாங்கம் அண்மையில் தீர்மானம் ஒன்றை எடுத்திருந்தது.

இந்தத தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக வடக்கு, கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த அரசாங்க உயர் அதிகாரிகளை அரசாங்கம் கொழும்பிற்கு அழைத்திருந்தது.

இது சம்பந்தமான மாநாடு கடந்த 26ஆம் திகதி புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு. அவர்களது காணி உறுதிகளை பிணை (பொறுப்பு) வைத்தே கடனுதவிகளை வழங்க அரச வங்கிகள் இணக்கம் தெரிவித்திருந்தன.

ஆனல் வடக்கு. கிழக்குப் பகுதிகளில் காணிப் பதிவுத்திணைக்களம் இயங்காத காரணத்தால் சம்பந்தப்பட்ட காணி உறுதிகள் சம்பந்தமான அத்தாட்சிகளைப் பெறமுடியாத நிலை தமிழ் மக்களுக்குஏற்பட்டிருக்கிறது.

இந்தக் குறைபாடு மாநாட்டில் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது

எனினும் காணி உறுதிகள் இல்லாமல் அரச வங்கிகள்சம்பந்தப்பட்ட மக்களுக்கு கடனுதவிகளை வழங்க முன்வராது என்றும் —

வங்கிகள் எடுத்திருந்த முடிவில் மாற்றம் எதுவும் செய்ய அந்த வங்கிகள் இணக்கம் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனவே வடக்குக், கிழக்குப் பகுதிகளில் காணிப் பதிவளர் திணைக்களம் இயங்கும் பட்சத்திலேயே தமிழ் மக்களுக்கு வங்கிக் கடனகள் கிடைக்க வாய்ப்பு ஏற்படும் என்று தற்போது அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (உ-ஜ-க)

### ஒப்பந்தத்துக்கு....

6 ஆம்பக்கத தொடர்ச்சி

கத்தை அடையும் முன்னர் இணைப்புப் பிரகடனத்தை அரசு வெளியிட்டிருக்கிறது.

உடன்பாடு,வேறுபாட்டுடன் அமுல்நடத்தப் படுகிறது.

நாட்டின் மூன்றில் ஒரு பகுதி இந்தியாவினல் ஆளப்படுகிறது.

நான் ஜனதிபதி வேட்பாளராக எட்டுக்கட்சிகளின் ஆதரவில் போட்டியிடுகிறேன்.

—இப்படிதிருமதி பண்டாரநாயக்கா தெரிவித்தார். (ஒ-எ)

கைலின் ஏற்பாட்டில்

## 'சிதைந்த வாழ்வில் எழுந்த பதிவுகள்'

### பத்தகக் கண்காட்சி விரைவில்

யாழ்ப்பாணம் அக். 3

'சிதைந்த வாழ்வில் எழுந்த பதிவுகள்'' எனும் தலைப்பில மாணவா இளைஞர் பொதுமன்றத்தால (கைஸ்) புத்தகக் கண்காட்சி ஒன்று விரைவில் ஒழுங்கமைப்பதற்கான முயற்சிகள் பேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இக்கண்காட்சியில் நாட்டாரியல், தொல் பொருளியல் ஆய்வுகள், சாசனவியல், புவியியல் [illegible] இலக்கியங்கள், கல்வியியல், மொழியியல் சம்பந்த மான வெளியீடுகளும் மற்றும் ஈழத்து சஞ்சிகைகளும கடந்த காலங்களில வெளியிடப்பட்ட பாடசாலை வெளியீடுகளும் உள்ளடக்கபட்டுள்ளன.

வரலாற்றின் தேவையை உணர்ந்து மேற்கொள்ளப்படும இப்பணியை வெற்றிகரமாக இட்டுச் செல்ல இத்துறையில் ஆர்வமுள்ள அனைவரும் மாணவர் இளைஞர் பொதுமன்றத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஒ.

### தொண்டர் சேவை

யாழ்ப்பாணம். அக 3

யாழ் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான வருடாந்த உற்சவம், புரட்டாசிச் சனி உற்சவங்களின் பாது யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தொண்டர்களும், நல்லை ஆதீனத்தைச் சேர்ந்த இந்து இளைஞர் மன்றத் தொண்டர்களும் தொண்டர் சேவையாற்றி வருகின்றனர்.

யாழ் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவினரும் சேவையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## மாவட்ட அமைச்சர்கள் இருவருக்கு ஏற்பட்ட அனுபவம்

அம்பாறை அக் 3

கிழக்கு மாகாணத்தில் அரசின இரு மாவட்ட அமைச்சர்கள் கார் ஒன்றில பயணம் செய்து கொண்டிருந்த போது இந்திய அமைதிப்படையினி முகாம் ஒன்றின் முன்பாக ஜவான் ஒருவரால் கார் தடுத்துநிறுத்தப்பட்டது

காரை நிறுத்திச் சோதனை செய்யப்போகிருரோ ஜவான் என மாவட்ட அமைச்சர்கள் நினைத்துக்கொண்டனர்.

ஜவான காரை நெருங்கினர்; 100 ரூபா தாள் ஒன்றை எடுத்து நீட்டி ''சேஞ்'' — ''சேஞ்'' என்றார். மாவட்ட அமைச்சர்களுக்கு அசடு வழிந்தது. தம் அவசரமாக சென்றடைய வேண்டிய நிகழ்ச்சியை எண்ணி புறு. புறுக்க வாறே'' நோ சேஞ்'' என்று கூறி பிரயாணத்தைத் தொடர்ந்தனராம்.

அக்கரைப்பற்று-கல்முனை பிரதான வீதியில் அட்டப்பள்ளம் எனும் இடத்தில் அமைந்துள்ள இந்திய அமைதிப்படை முகாம் ஒன்றின் முன்பாகவே மாவட்ட அமைச்சர்களுக்கு இந்த அனுபவம் ஏற்பட்டது! ஒ-14

## மாணவர் நலன்கருதி பாடசாலை பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குக!

கொடிகாமம் அக் 3

பாடசாலை மாணவர் நலன் கருதி பாடசாலை பஸ் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனப் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமது கோரிக்கையில் அவர்கள் தெரிவித்திருப்பதாவது;

முன்னர் யாழ்ப்பாணத்திலுள்ள உயர் கல்லூரிகளுக்கு வடபகுதியின் பலபகுதிகளிலிருந்தும் மாணவர்கள ரயில் மூலமும், பாடசாலை பஸ் சேவை மூலமும் சென்று கல்வி பயின்றனர்.

நாட்டு நிலைமை காரணமாக ரயில சேவை பாடசாலை பஸ் சேவை ஆகியன நிறுத்தப்பட்டன.

இதனல் யாழ் உயர் கல்லூரிகளுக்குச் செல்ல வேண்டிய மாணவர்கள் பெரிதும் இடர்ப்படுகின்றனர்.

தனியார் வாகனங்களிலும் ஏனைய பஸ்களிலும இவர்கள் செல்வதால் கூடிய பணச்செலவு ஏற்படுவதுடன் உரிய நேரத்தில கல்லூரிக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படுகின்றது.

வாகனம் கிடைக்காவிடில் கல்லூரி செல்ல முடியமல் வீட்டுக்குத் திரும்பும் நிலையும் ஏற்படுகின்றது

ஆதலால் பாடசாலை பஸ் சேவையை ஆரம்பித்து எதிர்கால இளைஞர் சமுதாயம் ஈடேற உதவி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர்,

(ஒ-சி-75)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

Indra Tooth Ache Drops
இந்திரா பல்வலி மருந்து
இது எல்லா விதமான பல்வலிகளையும் உடனே குணப்படுத்துகிறது. பல் விஷக்கிருமிகளை நாசஞ்செய்கிறது. பல் அசைவு, பல் சொத்தை, பல் கட்டி, தந்த வாய்வு, தந்த சூலை, துர்நீர் வடிதல் முதலியவற்றுக்குச் சிறந்தது.
கிடைக்கும் இடம்
க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச்சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

# உதயன்

03 - 10 - 1988 திங்கட்கிழமை

C. S. K. Omha Water
சி. எஸ். கே. ஓமத்திராவகம்
(குழந்தைகளின் வயிற்று நோய்களுக்குச் சிறந்தது)
மந்தம், மாந்தம், வயிற்றுவலி, வாந்தி, வாய்வு, அஜீரணம், வயிற்றோட்டம், பூச்சி, நெஞ்செரிவு முதலியன தீரும்.
கிடைக்கும் இடம்:
க.செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்
மருந்துச் சரக்கு வியாபாரம்
76, பெரியகடை, யாழ்ப்பாணம்.

## தமிழை அரசகரும மொழியாக்க அரசமைப்பில் திருத்தம் வரும்

கொழும்பு, அக் 3
தமிழை அரசகரும மொழியாக்க அரசமைப்புச் சட்டத்தில் சில விதிகளை திருத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

இதுசம்பந்தமாக ஏற்பட்டுள்ள முரண்பாடுகளை தீர்க்கும் முயற்சியில் அரசமைப்பு சட்ட அறிஞர்கள் ஈடுபட்டு வருகின்றனர் என்ற பொதுநிர்வாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஷரத்து 18 உத்தியோக மொழிகள் பற்றி கூறுகிறது.

ஷரத்து 19 தேசிய மொழிகள் பற்றிக் கூறுகிறது.

ஷரத்து 18 இன்படி உத்தியோக மொழி சிங்களமே.

அரசமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தத்தின்படி தமிழும் அரசகரும மொழியே.

ஷரத்து 19 இன்படி சிங்களமும் தமிழும் தேசிய மொழிகள்.

உத்தியோக மொழி; தேசிய மொழி ஆகிய நிலைப்பாடுபற்றிய வேறுபாடுகள் குறித்து அரசமைப்பு சட்ட நிபுணர்கள் தெளிவான கருத்துக்கொண்டிருக்கவில்லை என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

13 ஆவது திருத்தத்தின்படி தமிழும் அரசகரும மொழி என்றபடியால் தேசிய மொழிகள் என்றதற்கான சகலவிதிகளும் ரத்துச்செய்யப்படவேண்டும் என்று சில சட்ட நிபுணர்கள் கூறுகின்றனர்.

அரச சட்டத்தரணிகளின், கருத்துப்படி அவ்விதிகளை ரத்துச் செய்வது பாரதூரமான வெறுமையை ஏற்படுத்தும். உத்தியோகமொழிகளின் உபயோகம்பற்றி மேலும் குழப்பத்தை உருவாக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

உதாரணத்துக்கு நீதிமன்ற உத்தியோக மொழி உபயோகத்தை அவர்கள் காட்டுகின்றனர்.

எப்படியாயினும், எப்போது, எங்கே தமிழை உத்தியோக மொழியாக பாவிக்கலாம் என்பதற்கான வழிகாட்டல் கொண்ட சட்டம் ஒன்று நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (இ-எ)

## 8 கட்சிகள் கூட்டணி பற்றி குமார்

கொழும்பு, அக் 3
தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடியதான விரிவான திட்டம் ஒன்றைத் தயாரிக்காத நிலையில் எட்டுக் கட்சிகளின் கூட்டணி தமிழர் மத்தியில் எடுத்துச் சொல்வதற்கு அடிப்படையே இல்லை.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம் முன்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சண்டே டைம்ஸ் செய்தியாளருக்குச் சொன்னதாவது;

எட்டுக் கட்சிக் கூட்டணி (தமிழ்க் காங்கிரஸ் உட்பட) யினால் ஜனாதிபதியினால் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது பற்றிய அறிவிப்பு எனக்கு ஆச்சரியத்தையே தந்தது.

இந்த அறிப்பை வெளியிடும் முன்னர் பொது வேலைத் திட்டம் ஒன்று தயாரித்து இருக்க வேண்டும்.

அத்திட்டத்தில் தமிழர் பிரச்சினைக்கான தீர்வு விரிவான முறையில் இடம்பெற வேண்டும்.

அப்போதுதான் தமிழரிடத்தில் அதனைத் தமிழ்க் காங்கிரஸ் சமர்ப்பிக்கக் கூடியதாக இருக்கும்.

எல்லாக் கட்சிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொதுத் திட்டம் ஒன்றையே நான் ஏற்றுக் கொள்ள இணங்கினேன்.

நாட்டின் இறைமை, சுதந்திரம் பாதுகாக்கப்படவேண்டும்; சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படவேண்டும், ஜனநாயக முறையில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும்-இவை எல்லாம் பிடல் காஸ்டரோ தொடக்கம் பெர்டினன்ட் மார்க்கோஸ் வரை ஏற்றுக் கொள்ளக் கூடியவையே.

இப்படி திரு. குமார் பொன்னம்பலம் சொன்னார். (இ-எ)

## குடும்பநல சேவையாளர் பதவிகளுக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம் ஒக் 3
குடும்பநல சேவையாளர்கள் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தற்பொழுது கோரப்பட்டுள்ளன.

சுகாதார திணைக்களத்தினால் அண்மையில் தாதிகள் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டது தெரிந்ததே.

தற்பொழுது அதே தகுதியில் குடும்ப நல சேவையாளர்களுக் கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

இது பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தகவல் தருகையில் ''இந்த பதவிக்கான விண்ணப்பங்கள் அந்தந்தப்பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஊடாகவே கோரப்பட்டுள்ளன.

''ஆனால் வடக்கு கிழக்கு பகுதிக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லை இதனால் விண்ணப்பங்கள் அந்தந்த பகுதி சுகாதார திணைக்கள அலுவலகங்கள் ஊடாகவே கோரப்படும்'' என்றார். (இ)

## ஹொக்கியில் பிரிட்டனுக்கு தங்கப் பதக்கம்

சோல், அக் 3
ஆடவருக்கான ஹொக்கிப் போட்டியில் பிரிட்டன் மேற்கு ஜேர்மனியை 3-1 கோல்களால் தோற்கடித்து சோல் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை பெற்றது.

68 ஆண்டுகளுக்குப் பின்னர் ஹொக்கிப் போட்டியில் பிரிட்டன் தங்கப் பதக்கம் பெற்றது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. மேற்கு ஜேர்மனி வெள்ளிப்பதக்கத்தைப் பெற்றது.

நெதர்லாந்து, ஆஸ்திரேலியாவை 2-1 கோல்களால் தோற்கடித்து வெண்கலப் பதக்கத்தைப்பெற்றது.

ஹொக்கிப் போட்டி முடிவுகளின் படி முதல் ஆறு இடங்களைப் பெற்ற நாடுகள் வருமாறு;

1. பிரிட்டன்— தங்கம்
2. மே. ஜேர்மனி— வெள்ளி
3. நெதர்லாந்து— வெண்கலம்
4. ஆஸ்திரேலியா
5. பாக்கிஸ்தான்
6. இந்தியா (இ-எ)

## இரு ஜவான்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஜவான்களையும் புதுக்குடியிருப்புப் பிரசைகள் குழுச் செயலாளர் திரு. தா. சண்முகநாதன் முதலில் வரவேற்றார்.

விடுவிக்கப்பட்ட ஜவான்களிடம் பொது மக்கள் உரையாடி அவர்கள் நிலையை விசாரித்தனர்.

அதன் பின்னர் திரு சண்முகநாதன், மகா வித்தியாலய அதிபர் திரு. கா. செல்வராசா, உப தபாலதிபர் திரு. கி. யோகீஸ்வரன், பனம்பொருள் அபிவிருத்திச் சபையைச் சேர்ந்த திரு. அன்ரன் பரமதாஸ், வர்த்தக சங்கத் தலைவர் திரு. நா. தர்மலிங்கம் மற்றும் கிராம சேவகர்களுடன் சேர்ந்து புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் திரு. அ. இராசரத்தினம், விடுவிக்கப்பட்ட ஜவான்களை புதுக்குடியிருப்பு இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்று ஒப்படைத்தனர். (அ 126)

## முதல் தடவையாக....

(1ம் பக்கத் தொடர்ச்சி)
குறைகூட வராமல் நன்கு கவனித்தோம்.

நாங்கள் இவர்களை விடுவிப்பதன் மூலம் எமது நல்லெண்ணத்தை இந்திய அரசுக்குத் தெரிவிக்கின்றோம்.

ஆயுதங்கள் மீது மோகம் கொண்ட வெறிபிடித்த போராளிகள் என்று எம்மைப்பற்றி அவதூறு கூறும் இந்திய அரசுக்கு நாம் தெரிவிப்பதெல்லாம் இதுதான்:-

''நாம்மனிதாபிமானம் மிக்கவர்கள், உறுதிமிக்க இலட்சியப் போராளிகள், நேர்மைமிக்க விடுதலைக்காகப் போராடுபவர்கள்'' என்பதே —

இந்திய இராணுவத்தைச்சேர்ந்த சார்ஜண்ட் ராஜேந்தர், நாயுக் நாயுடு ஆகிய இருவரையும் அவர்களது விருப்பின்பேரில் இங்குதவைத்து ஒப்படைக்கின்றோம்.

எம்மைப்பற்றித் தவறான கருத்துக்கள் பரவாமல் இருப்பதற்காகவே நாம், புதுக்குடியிருப்புப் பிரசைகள் குழுவினர், கிராமசேவை அலுவலர்கள், உதவி அரசாங்க அதிபர் ஆகியோர் முன்னிலையில் இவர்களை ஒப்படைக்கின்றோம்.

எமது பண்பு, நல்லெண்ணம், எமது இலட்சியம் ஆகியவற்றில் தாம் விளங்கிக்கொண்டவற்றை இவர்கள் ஏனைய இராணுவத்தினரிடமும், இந்திய அரசிடமும் கூறி எமது நியாயமான உரிமைப் போராட்டத்தை புரிந்து கொள்ளும் படி செய்யவேண்டும்.

இவ்வாறு அவர் உரையாற்றினார். (க-126)

## மயிலிட்டி......

(1ம் பக்கத் தொடர்ச்சி)
பெறவில்லை

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை எதிர்த்தும் இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறக்கூடாது என ஆட்சேபித்தும் அந்தப் பகுதி மக்கள் பெரிய மரக் குற்றிகளையும், பழுதடைந்த வாகனங்களையும் வீதிக்குக் குறுக்கே போட்டு வீதி மறிப்புச் செய்ததுடன், தாமும், வீதி மறிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவத்தினால் அவ்வழியால் வந்த அமைதிப் படையினரும் திரும்பிச்செல்ல நேரிட்டதாம் (இ-9)

## சகல...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
படைத்துவிட்டு தேர்தலில் பங்கேற்கவேண்டும்.

தமிழர் எதிர்பார்த்ததற்கும் பார்க்க கூடுதலான உரிமைகளை இந்திய இலங்கை ஒப்பந்தம் பெற்றுக்கொடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிடிவாதத்தினால் சகஜநிலை திரும்புவது, அகதிகள் தாயகம் திரும்புவது, ஜனநாயக சுயாட்சி கிடைப்பது ஆகியன தடைப்பட்டுள்ளன.

இலங்கைத் தமிழ் அகதிகளுக்குத் தங்க இடமளித்த மண்டபம் மக்களுக்கு நாடே கடமைப்பட்டுள்ளது.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவித்தார். (இ-க-எ)

எமது நேற்றைய வெளியீடு
எங்க ஊரு காவற்காரன்
ராமராஜன் கவுதமி நம்பியார்
செந்தில் சந்திரன்
குரு வீடியோ சென்ரர்
180, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம். (6916)

வடக்குக் - கிழக்குத் தேர்தல்:

## ஒத்திவைப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை
### தேர்தல் ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு, அக் 3
வடக்கு - கிழக்கு மாகாணசபைத்தேர்தலை ஒத்திவைப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா செய்தியாளர்களிடம் தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி அறிவித்தது.

இத்தேர்தலில் பங்கு பற்றப்போவது இல்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி அறிவித்து விட்டது.

உண்மையாக முழு அமைதி ஏற்படாதநிலையில், போரினால் சீரழிந்து கிடக்கும் இப்பகுதியில் தேர்தல் நடத்துவது இரத்தம் சிந்துவதற்கான வழியை ஏற்படுத்தும் என்றும் கூட்டணி தெரிவித்திருக்கிறது.

ஈ. பி. ஆர். எல். எப். இயக்கத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவரான திரு. வரதராஜப் பெருமாள்,

''எமது இயக்கம் இத்தேர்தலில் பங்கு கொள்ளும்.

''எங்கள் இயக்கத்தைச் சேர்ந்த வேட்பாளர்களின் பாதுகாப்புக்கு தேவையான ஆயுதங்களை இலங்கை அரசு எங்களுக்கு அளிக்க வேண்டும்

''தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையாகிய சட்டப்படியான ஜனநாயக உரிமையை எவரும் தடைசெய்ய முடியாது. அப்படித் தடை செய்பவர்களைச் சமாளிக்க ஈ. பி ஆர். எல். எப். இயக்கம் தயாராக இருக்கிறது.

எமது இயக்கம் தேர்தல் நடவடிக்கைகளை தொடங்கிவிட்டது. சுவரொட்டிகளை ஒட்டுதல் வாக்காளருக்கு வேண்டுதல் விடுத்தல் ஆகியவற்றை எல்லாம் எமது இயக்கம் நடத்தத் தொடங்கிவிட்டது.

இப்படி திரு. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-எ)

## தோற்ற வேட்பாளரும் சுட்டுக் கொலை

கொழும்பு, அக் 3
மேற்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த வேட்பாளர்களில் ஒருவரான திரு. ரட்ணயக்கா என்பவர் நேற்று மாலை மோட்டார் சைக்கிளில் வந்தவர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பாணந்துறையில் இச் சம்பவம் இடம்பெற்றது. (இ-எ)

## பாக் சுப்ரீம்கோர்ட் அளித்த தீர்ப்பு

இஸ்லாமபாத், அக்.3
கட்சி அரசியல் அடிப்படையில் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை நடத்தும்படி பாகிஸ்தான் சுப்ரீம் கோர்ட் நேற்று உத்தரவிட்டது.

மக்கள் கட்சித் தலைவி பெனாசீர் பூட்டோசமர்ப்பித்த மனுவின் மீது இத்தீர்ப்பு அளிக்கப்பட்டது.

கட்சி அடிப்படையில் தேர்தலை நடத்துவதுடன் போட்டியிடும் கட்சிகளுக்குத்தனித்தனியே தேர்தல் சின்னங்களும் வழங்கப்படவேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்துள்ளது.

## இராமநாதபுரம் பகுதியில் தேடுதல்

வட்டக்கச்சி, அக்.3
கிளிநொச்சிப் பகுதியில் உள்ள இராமநாதபுரத்தில் வெள்ளிக்கிழமை அதிகாலை இந்திய அமைதிப்படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

தேடுதலின்போது இப்பகுதிமக்கள் பலர் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக வட்டக்கச்சி முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இராணுவத்தினர் வட்டக்கச்சி முகாமுக்கு வரும்போது சில்வா வீதிக்கு அடுத்துள்ள புதுப்பாலம் என்னுமிடத்தில் சிறிதுநேரம் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

155ஆம் கட்டை முகாமில் இருந்து ஒருசில ஷெல்கள் கல்மடு நகர் காட்டுப்பகுதிக்கு ஏவப்பட்டன. (இ-ரி)

## தேர்தல்.,...

(1ம் பக்கத் தொடர்ச்சி
தீவிரப்படுத்தப்பட்ட போதிலும் குறிப்பிட்டுக் கூறத்தக்கதான அசம்பாவிதங்களோ தாக்குதல்களோ இங்கு அறிவிக்கப்படவில்லை.

யுத்த நிறுத்தம் முடிவுற்ற கடந்த 25 ஆம் திகதி முதல் சேமமடு முதலாம் யுனிட்டில் இந்திய அமைதிப் படையினர் முகாம் அமைத்து நிலை கொண்டுள்ளனர்.

கல்மடு, சாஸ்திரி கூழாங்குளம், பம்பைமடு போன்ற பகுதிகள் திடீர் சுற்றிவளைப்பு தேடுதல்களுக்கு உள்ளாகின. (இ-க-164)

## சுதந்திரக் கட்சி வென்றால்,....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
வுடன், நாட்டில் அமைதி ஏற்படும்.

இந்த அணியின் வேட்பாளர் வெற்றி பெற்றவுடன் ஆயுதக் கிளர்ச்சியில் தொடர்ந்து ஈடுபடும் நிலை ஜே வி. பிக்கு இருக்காது காரணம் ஜே. வி. பி, அரசாங்கத்தில் ஓர் அங்கமாகி விடும்.

பொதுச் சின்னம் ஒன்றைத் தேர்ந்தெடுப்பதில் எட்டுக் கட்சி அணி இன்னும் வெற்றி பெறவில்லை. தேர்தல் ஆணையாளருடன் இது பற்றிப் பேசி வருகிறோம்.

அணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் விருப்புக்கு இணங்கவே பொதுச்சின்னம் இருக்கும்.

புதிய அரசமைப்புச் சட்டம் பற்றிய பேச்சுகள் இன்னும் முடியவில்லை.

நாடாளுமன்ற ஜனநாயக முறையை மீண்டும் ஏற்படுத்தக் கூடியதாக புதிய அரசமைப்பு இருக்கும்.

இ. தொ. காவுடன் பேச்சுக்களை எமது கட்சியைச் சேர்ந்தவர்கள் நடத்தியிருக்கக் கூடும். அது [illegible] தெரியவில்லை. ஜே வி. பியுடனான பேச்சுகள் குறித்தே நான் தீவிரமாக ஈடுபட்டிருந்தேன்.

இப்படி திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார். (இ-எ)

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் பரமநாதன் (சோதி)

மயிலிட்டி, வீரமாணிக்கதேவன் துறையைச் சேர்ந்த வைத்திலிங்கம் பரமநாதன் 1-10-88 அன்று அகால மரணமானார். இவர் வைத்திலிங்கம் இலட்சுமியம்மா தம்பதிகளின் மகனும் ஏரம்பமூர்த்தி இலட்சுமியம்மா தம்பதிகளின் மருமகனும் கமலேஸ்வரியின் அன்புக் கணவரும் கிருஷ்ணவேணி, வத்சலா, கமலாஜினி, லோகிதன், சுகந்தன், ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவயோகநாதன் (வல்வெட்டித்துறை), புனிதக்கிளி, தங்கேஸ்வரன், சண்முகநாதன் (லங்கா சீமேந்து நிறுவனம்), காலஞ் சென்ற மகேசநாதன் [சஞ்சீவி.குகன்] கணேசநாதன், [ஜெகன்] ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிறிதரன், பத்மநாதன், பரமேஸ்வரன் (U.K.) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். ஈமக்கிரியைகள் 2-10-88 மாலை 4-00 மணியளவில் வீரமாணிக்க தேவன்துறை குடும்பமயானத்தில் நடைபெற்றது.

நண்பர்களும் உறவினர்களும் இதனை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் தருபவர்:
ச.ஏரம்பமூர்த்தி
[6912)

### வேதாபரணம் தர்மசீலன்

வேதாபரணம் தர்மசீலன் லண்டனில் காலமாகிவிட்டார். இவர் காரைநகர் கலாநிதி தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தின் இளைப்பாறிய அதிபரும், தபோநிதியின் அன்புக் கணவரும், ஆனந்தராஜன் (Canada), மனோகரன் (U.K.), ஒப்பில்லா கனகசிங்கம், அமிர்தரட்ணம் மில்க்யோர் அருள்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

இவரின் நல்லடக்க ஆராதனை 4-10-88 நாளை லண்டனில் நடைபெறும். அத்தருணம் 4-10-88 மாலை 3 மணிக்கு காரைநகர் தேவாலயத்தில் ஓர் ஞாபகார்த்த ஆராதனை நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களும் தயவாக ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி, காரைநகர்.
தகவல் தருபவர்:
வே. அற்புதஜெயம்
(6919)

### திருமதி தம்பையா செல்லமுத்து

சிறுப்பிட்டியைச்சேர்ந்ததிருமதி தம்பையா செல்லமுத்து காலமானார். இவர் காலஞ்சென்ற பண்டிதர் சி.கா.தம்பையா (அதிபர் மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி.சச்சிதானந்தம் (ஆசிரியை, மகாவித்தியாலயம் அச்சுவேலி), திரு, அருணாசலம், கனகரத்தினம் (புறாளை), குமாரதாசன் (நாதன்) ஆகியோரின் தாயாரும், திரு.சச்சிதானந்தம் (இளைப்பாறிய இராணுவவைத்திய அதிகாரி), திருமதி பாராவதிப்பிள்ளை, சுனேந்திரகுமாரி (அவுஸ்திரேலியா), சரோஜினிதேவி ஆகியோரின் மாமியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 3-10-88 நண்பகல் 12 மணியளவில் சிறுப்பிட்டியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி செ.சச்சிதானந்தம்
சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
(6917)

### செல்வன் சகாதேவன் செல்வகுமார் (கீதன்)

(முடமாவடி மோட்டார் சைக்கிள் கராஜ் உரிமையாளர்)

சகாதேவன் செல்வகுமார் (கீதன்) 29-9-88 இல் நல்லூரில் அகால மரணமானார். அன்னார் சகாதேவன் செல்வராணி தம்பதிகளின் அன்பு மகனும் கிருஷ்ணதேவன் (கண்ணன்) [கண்ணா றிப்பியறிங் சென்ரர்] கிருஷ்ணகுமார் (ராதா)(டோகா), ஜெயந்தி (ஜெயராணி) (தையல் ஆசிரியை) உதயகுமார் (குட்டி) (முடமாவடி மோட்டார் சைக்கிள் கராஜ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி கி சரோஜினிதேவியின் மைத்துனரும், டினேஷா (சாம்பவி)யின் அன்புச் சித்தப்பாவுமாவார். அன்னாரின் ஈமக்கிரியை செங்குந்தா வீதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் (3-10-88) திங்கள் காலை 9-30 மணியளவில் செம்மணி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. சகாதேவன் (தந்தை)
செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
(வெள்ளைப் பிள்ளையார் கோவிலடி.)
யாழ்ப்பாணம்.
7121))

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 03-10-1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Monday 3rd October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org